பொதுசன நூலகம்
[illegible] படிப்பகம்
மாநகர சபை, யாழ்ப்பாணம்.

Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10.00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

முரசு - 01 திருவள்ளுவர் ஆண்டு 2042 சித்திரை 07 புதன்கிழமை (20.04.2011) பக்கங்கள் 12+IV ஓசை - 203

C/646 Job! With High Salary
Follow
Cima_UK, BIT
(O/L,A/L not necessary)
MCS 324,Palaly Road,Parameswara Junction www.mcsitcampus.org
SMS your name & course to 772 395 895 & Get Schol.



# ஆக்கபூர்வமான நடவடிக்கைகளுடன் நிறைவடைந்த ஒருங்கிணைப்புக் கூட்டம்

(அலுவலகச் செய்தியாளர்)

நேற்று யாழ்.செயலகத்தில் நடைபெற்ற யாழ்., கிளிநொச்சி மாவட்டங்களின் அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளுடன் நிறைவு பெற்றது.

யாழ்.செயலக கேட்போர் கூடத்தில் நேற்று முற்பகல் 10.00 மணிக்கு ஆரம்பமாகிய இவ் அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம், பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சரும், யாழ்., கிளிநொச்சி மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுவின் இணைத் தலைவர்களில் ஒருவருமாகிய கே.என். டக்ளஸ் தேவானந்தா தலைமையில் ஆரம்பமாகி நடைபெற்றது.

இதில் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வெஸ்திரி அலென்ரின் (உதயன்), தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான அப்பாத்துரை விநாயகமூர்த்தி, ஈ. சரவணபவன், சிவஞானம் சிறிதரன், ஐக்கிய தேசியக் கட்சியின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரான விஜயகலா மகேஸ்வரன், யாழ். மாவட்ட அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார், கிளிநொச்சி (11ஆம் பக்கம் பார்க்க)

# நாட்டின் இறையாண்மையைக் காக்க அரசுடன் இணைவதற்கு தயார்

## ஐக்கிய தேசியக் கட்சி முடிவு

(கொழும்பு)

**இறையாண்மையுடைய இலங்கை மீது அபாண்டமான குற்றச்சாட்டுக்களைச் சுமத்தியுள்ள ஐ.நா. சபையின் செயலாளர் பான் கீ மூனின் அறிக்கையை அரசாங்கத்துடன் இணைந்து எதிர்க்கத் தயாராகி வருவதாக ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது. நிபுணர் குழுவின் அறிக்கை தொடர்பாக கொழும்பில் இடம்பெற்ற பத்திரிகையாளர் மாநாடொன்றிலேயே மேற்கண்டவாறு ஐ.தே.க. தெரிவித்துள்ளது.** (12ஆம் பக்கம் பார்க்க)

## ஐ.நா.அறிக்கை தொடர்பில்

## தி.மு.க. - அ.தி.மு.க. மௌனம் சாதிப்பது ஏன்?

(டெல்லி)

தேர்தல் காலங்களில் தமிழ் மக்கள் குறித்து கண்ணீர் வடித்த தமிழக பிரதான கட்சிகள், தற்போது ஐக்கிய நாடுகள் சபையின் அறிக்கை வெளியாகியுள்ள நிலையில், எந்தக் கருத்தையும் வெளியிடவில்லை என டெக்கான் குரொனிகள் இணையத்தளம் விமர்சித்துள்ளது.

கடந்த 2009ஆம் ஆண்டு தேர்தலிலும், 2011ஆம் ஆண்டு தேர்தலிலும், தமிழகத்தின் ஆளும் கட்சியான திராவிட முன்னேற்றக் கழகம் மற்றும் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் என்பன பல்வேறு நிலைப் (12ஆம் பக்கம் பார்க்க)

## அரசின் பதிலுக்காக காத்திருக்கிறது ஐ.நா.

(கொழும்பு)

இலங்கை தொடர்பில் ஐக்கிய நாடுகள் சபையின் நிபுணர்கள் குழு சமர்ப்பித்துள்ள அறிக்கையை, சபையின் பொதுச செயலாளர் பான் கீ மூன் பரிசீலித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஐக்கிய நாடுகள் சபையின் பேச்சாளர் பர்ஹான் ஹக் இதனை தெரிவித்துள்ளார். இதற்காக பான் கீ மூன் தமது சிரேஷ்ட ஆலோசர்களுடன் இணைந்துள்ளதாக அவர் (12ஆம் பக்கம் பார்க்க)


## பாதுகாப்புச் சபையில் இலங்கை விவகாரம்

(கொழும்பு)

இலங்கை தொடர்பாக ஐ.நா நிபுணர்குழு சமர்ப்பித்த அறிக்கை குறித்து ஐ.நா பாதுகாப்புச் சபைக்கூட்டத்தில் விவாதிக்கப்படவுள்ளதாக ஐ.நா.வின் அரசியல் விவகாரங்களுக்கான உதவி செயலாளர் லியான் பொஸ்கோ கூறியுள்ளதாக இன்னர் சிற்றி பிரஸ் செய்தி வெளியிட்டுள்ளது.

இலங்கை விவகாரம் குறித்தும், ஐ.நா. பொதுச்செயலாளரின் உதவி செயலாளர் லியான் பெஸ்கோவின் கட்டார் மற்றும் (12ஆம் பக்கம் பார்க்க)

## லிபியாவுக்கு துருப்புக்களை அனுப்ப தயாராகிறது ஐரோப்பிய ஒன்றியம்



(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் சபை கோரிக்கை விடுத்தால் லிபியாவில் மனிதாபிமான உதவிகளுக்காக இராணுவ நடவடிக்கையை மேற்கொள்வதற்காக இராணுவத்தினரை அனுப்புவதற்கு தயாராகவுள்ளதாக ஐ.நா. உயர் ஸ்தானிகராலயத்தின் பிரதம பேச்சாளர் கைம்கல் மான் தெரிவித்துள்ளார்.

எவ்வளவு துருப்புகள் அனுப்பப்படும் என்ற விபரத்தை அவர் தெரிவிக்கவில்லை. எனினும், நிச்சயமாக 1000 இற்கும் குறைந்த எண்ணிக்கையிலான துருப்புகளே அனுப்பப்படும் என அவர் கூறினார்.

இடம்பெயர்ந்த மக்களை பாதுகாப்பாக வெளியேற்றுதல், மனிதாபிமான உதவிகளுக்கான வாகனத் தொடரணிகளுக்கு பாதுகாப்பளித்தல் போன்றவற்றில் மனிதாபிமான முகவர் நிறுவனங்களுக்கு ஐரோப்பிய ஒன்றிய இராணுவம் உதவும்.

இந்நடவடிக்கைக்கு ஈயூ போர் லிபியா எனப் பெயரிடப்பட்டுள்ளது. இதற்கு ஐரோப்பிய ஒன்றியத்தின் 27 நாடுகளும் சம்மதம் தெரிவித்துள்ளன.

லிபியாவில் கேணல் கடாபியின் படைகளுக்கு எதிராக நேட்டோ அமைப்பு விமானத் தாக்குதல்களை நடத்தி வருகிறது. எனினும் லிபியாவிற்கு தரைப்படைகளை அனுப்பும் சாத்தியத்தை மேற்குலக நாடுகள் (12ஆம் பக்கம் பார்க்க)

# குற்றவாளிக் கூண்டுக்குள் அரசு - புலிகள்



## ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் சபை செயலாளர் நாயகத்தினால் நியமிக்கப்பட்ட நிபுணர் குழுவின் அறிக்கை இலங்கை அரசாங்கத்தைக் குற்றவாளிக் கூண்டில் நிறுத்தியுள்ளது என ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

ஐ.நா. நிபுணர் குழுவின் இலங்கை அறிக்கை தொடர்பில் கருத்துத் தெரிவித்த மனோகணேசன் மேலும் கூறியுள்ளதாவது,

புலிகளுக்கு எதிரான யுத்த வெற்றியை தமிழ் மக்களுக்கு எதிரான வெற்றியாக முன்னெடுத்து சர்வதேசத்தை பகைத்துக் கொள்வதா அல்லது ஒன்றுபட்ட இலங்கைக்குள்ளே தமிழ் மக்களுக்கு சுயாட்சியை (12ஆம் பக்கம் பார்க்க)

### மாணவச் செல்வங்களே

☞ உள்ளே கல்வி முரசு

தரம் - 5 புலமைப்பரிசில் பரீட்சை 2011 பகுதி II இன் விசேட வினாத்தாள் இணைக்கப்பட்டுள்ளது.

### – சாவகச்சேரி புகையிரத பாதை விஸ்தரிப்பு –

# பொது அமைப்புக்களுடன் கலந்துரையாடிய பின் முடிவு எடுக்கப்படும்; அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரிப் பகுதியில் புகையிரதப்பாதை விஸ்தரிப்பு தொடர்பாக அப்பகுதிப் பொதுமக்களுக்கு ஏற்படவுள்ள இழப்புக்கள் மற்றும் அசௌகரியங்கள் குறித்து அப்பகுதி பொது மக்களுடனும் பொதுஅமைப்புக்களுடனும் கலந்துரையாடி தீர்வு காணப்படவுள்ளதாக அமைச்சரும் யாழ். மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுவின் இணைத்தலைவருமாகிய் கே.என். டக்ளஸ்தேவானந்தா தெரிவித்தார்.

நேற்று யாழ். செயலகத்தில் நடைபெற்ற யாழ்., கிளிநொச்சி மாவட்டங்களின் அபிவிருத்திக் குழுக்கூட்டத்தில் கலந்து கொண்டிருந்தபோது சாவகச்சேரி பிரதேச செயலரினால் இக் கோரிக்கை முன்வைக்கப்பட்டது. சாவகச்சேரிப்பகுதியில் பிரதான வீதியும் புகையிரதப்பாதையும் நெருக்கமாக அமைத்துள்ளதன் காரணமாக இவை அகலமாக்கப்படும் போது பொதுமக்களது சொத்துக்கள் இழக்கப்படுவதுடன், பொதுமக்களுக்கு அசௌகரியங்களும் ஏற்படும் இது தொடர்பாக பொது மக்கள் சாவகச்சேரி பிரதேச செயலரிடம் முறைப்பாடு ஒன்றைத்தெரிவித்து நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுள்ளனர்.



இதன் போது குறித்த புகையிரதப்பாதையை தெற்காக பின்னோக்கி அமைக்குமாறும் கோரியிருந்தனர். அதனை சாவகச்சேரி பிரதேச செயலர் யாழ். மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக்குழுவிடம் நேற்று சமர்ப்பித்திருந்தார்.

இதற்கு பதிலளிக்கையிலேயே அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இவ்விடயம் குறித்து அப்பகுதி பொதுமக்களுடனும் பொது அமைப்புக்களுடனும் கூடி கலந்துரையாடி முடிவெடுப்பதாக தெரிவித்தார். இதற்கு நேற்றைய அபி விருத்தி ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் பங்கேற்றிருந்த தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் உட்பட அனைவரும் ஆதரவு தெரிவித்தனர். (பா)

# சமாந்தரமாகச் சென்ற 11பேருக்கு 11ஆயிரம் ரூபா தண்டம் விதிப்பு

(சாவகச்சேரி)

கொடிகாமம் பகுதியில் சைக்கிளில் சமாந்தரமாகச் சென்ற 11 பேரை கொடிகாமம் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

குறித்த 11 பேரையும் நேற்றையதினம் சாவகச்சேரி நீதிமன்ற பொலிஸார் நீதிமன்றில் ஆஜர் படுத்தியபோது அனைவரும் குற்றத்தை ஒப்புக் கொண்டதை அடுத்து, 11 பேரும் தலா ஆயிரம் ரூபா வீதம் அபராதமாக செலுத்துமாறும், செலுத்த தவறின் 1 மாதகால சாதாரண சிறைத் தண்டணையை அனுபவிக்குமாறும் நீதிபதி உத்தரவிட்டு தீர்ப்பளித்தார். (11)


## பனை அபிவிருத்திச் சபை
## PALMYRAH DEVELOPMENT BOARD

**Renovation of Palmyrah Research Institute Building for Palmyrah Development Board at Kaithady - Jaaffna**

01. The Chairman of the Palmyrah Development Board now invites sealed bids form eligible and qualified bidders for "Renovation of Palmyrah Research Institute Building for Palmyrah Development Board, Jaffna' as described below and estimated to cost of Rs. 13.26 million.

    The construction period is 180 Days.

02. Bidding wille be conducted through National Competitive Bidding Procedure.

03. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall be registered in the field of building construction for grade M5/C6 or above with the Institute for Construction Training and Development (ICTAD)

04. Interested bidders may obtain further information from the Department of Building (Central), Beach Road, Jaffna or The Chairman, Palmyrah Development Board (Jaffna), and inspect the bidding documents at the same address on any working day from 8.30 hrs to 16.15 hrs. Contact numbers are Phone : 0212222034 Facsimile : 0212224154 & Building Department No : 0212222781.

05. A complete set of Bidding Documents in English Ianguage may be purchased by interested bidders on the submission of a written application to The Chairman, Palmyrah Development Board, NHDA Building, Kandy Road, Jaffna from 27th April 2011 until 10th may 2011 from 8.30 hrs to 16:15 hrs upon payment of non refundable fee of Rupees one thousand (Rs.1000/=).

06. Bids shall be delivered or sent by registered post to The Chirman, Palmyrah Development Board, NHDA Building, kandy Road, Jaffna before 10:00 hrs on 20th may 2011. Bids will be opened soon after closing at the Office of The Chairman, Palmyrah Development Board, NHDA Building, Kandy Road, Jaffna in presence of the bidders' representatives who choose the attend.

07. Bidders are advised to enter "NHDA Building, Kandy Road" Premises at least 1 hour before the scheduled time for tender closing, due to secutity checking.

08. All bids shall be accompanied by a Bid Security obtain for a reputed Bank in Srilanka
    * in the form included in the section 09 of the Bidding document
    * in favour The Chairman, Palmyrah Development Board
    * For an amount of Rupees Two hundred and sixty five thousand (Rs. 265,000.00)
    * valid up to 07th August 2011.

**Pasupathy Seevarathnam,**
**Chairman,**
**Palmyrah Development Board.**

(C/696)


# நியமனம்

(பருத்தித்துறை)

கரவெட்டி கோட்டக்கல்விப் பணிப்பாளராக சி. நற்குணலிங்கம் வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளரினால் நியமிக்கப்பட்டுள்ளார்.இவர் முன்னர் வல்வெட்டித்துறை சிதம்பராக் கல்லூரி அதிபராக கடமையாற்றியதுடன், தற்போது கரவெட்டி பிரதேச செயலக மத்தியஸ்தர் சபையின் தவிசாளராக செயற்பட்டு வருகிறார். (109)

# நிர்வாகசபைக் கூட்டம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகராட்சி மன்றத்திற்குட்பட்ட சனசமூக நிலையங்களின் சமாச நிர்வாக சபைக்கூட்டம் இன்று புதன் கிழமை பிற்பகல் 4 மணிக்கு சாவகச்சேரி நகராட்சி மன்ற மாநாட்டு மண்டபத்தில் சமாசத் தலைவர் க.கஜிதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்திற்கு சமாச அங்கத்தவர்கள் அனைவரையும் தவறாது கலந்துகொண்டு ஆலோசனைகளையும் கருத்துக்களையும் முன்வைக்குமாறு சமாச செயலாளர் செ. சுப்பிரமணியம் அறிவித்துள்ளார். (11)


## சிறு விளம்பரம்

**காணி விற்பனைக்கு**

கிளிநொச்சி-கோணாவில் பிரதேசத்தில் யூனியன் குளம் பகுதியில், (05) ஐந்து ஏக்கர் மேட்டுக்காணி விற்பனைக் குண்டு

தொடர்புக்கு : 0773289577

(C/519)


# உப்பளப்பகுதியில் கண்ணிவெடி அகற்றும் பணிகள் ஆரம்பம்

(முரசுமோட்டை)

ஆனையிறவு உப்பு உற்பத்தியாகும் உப்பளப்பகுதிகளில் DASH நிறுவனம் கண்ணிவெடி அகற்றும் பணிகளை மேற்கொண்டுவருகிறது.

இலங்கையில் கூடுதலான உப்பு உற்பத்தியில் முக்கியத்துவம் பெறும் இடங்களில் ஒன்றாக ஆனையிறவு காணப்பட்டபோதிலும், கடந்த கால யுத்த அனர்த்தங்களினால் இதன் செயற்பாடுகள் பாதிக்கப்பட்டிருந்தன.

தற்போது குறித்த நிறுவனம் கண்ணிவெடி அகற்றும் பணியினை கடந்த 2010 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் முதல் மேற்கொண்டுவருவதாக தெரிவிக்கப்படுகிறது.

உப்புசாலை மற்றும் அலுவலக கட்டத்தொகுதி ஆகிய பகுதிகளில் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு கண்ணிவெடிகள் மற்றும் வெடிபொருட்கள் அகற்றப்பட்டு ஆனையிறவு கிராம அலுவலரிடம் கையளிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதில் 22 மிதிவெடிகளும் வெடிக்கும் நிலையில் காணப்பட்ட 18 வெடி பொருட்களும் அகற்றப்பட்டுள்ளதுடன், ஆயிரத்து 300 M நீளமான வாய்க்கால் பகுதிகளிலிருந்து 108 மிதிவெடிகளும் வெடிக்கும் நிலையில் காணப்பட்ட 21 வெடிபொருட்களும் மற்றும் 343 துப்பாக்கி ரவைகளும் அகற்றப்பட்டு செயலிழக்கப் பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (110)

# பாலியல் குற்றம் புரிந்தவருக்கு 5 வருட ஒத்திவைக்கப்பட்ட சிறை

(சாவகச்சேரி)

சாவகச்சேரி - மட்டுவில் வடக்கு பகுதியில் கடந்த 2008ஆம் ஆண்டு ஜூன் மாதம் 2ஆம் திகதி வீட்டிற்குள் புகுந்து 27 வயது பெண்ணை பாலியல் பலாத்தாரம் செய்த குற்றத்திற்காக பொலிஸாரினால் கைது செய்யப்பட்ட நபருக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட வழக்கு நேற்றையதினம் சாவகச்சேரி நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

குறித்த நபரிடம் விசாரணையை மேற்கொண்ட சாவகச்சேரி நீதிமன்ற நீதிவான் மா. கணேசராசா குறித்த நபருக்கு 5வருடத்திற்கு ஒத்திவைக்கப்பட்ட கடூழிய சிறைத்தண்டனையுடன் ஆயிரத்து 500 ரூபா தண்டப்பணமாக செலுத்துமாறும், செலுத்தத் தவறின் 1 மாதகால சாதாரண சிறைத்தண்டனையை அனுபவிக்கமாறும் தீர்ப்பளித்தார். (11)

# கிரவல் வீதிக்குப் பதிலாக தார்,கொங்கிறீற் வீதிகள்

(முரசுமோட்டை)

கரைச்சி பிரதேச சபையினால் எதிர்காலத்தில் எந்தவொரு வீதிகளும் கிரவல் கொண்டு புனரமைப்பதில்லை என தீர்மானிக்கப்பட்டுள்ளது. கடந்த காலங்களில் கிளிநொச்சி மாவட்டத்தில் பெரும்பாலான வீதிகள் கிரவல் போடப்பட்டே புனரமைக்கப்பட்டு வந்தன. இதனால் இவ்வீதிகளினூடாகப் பயணிக்கும் மக்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் சிலர் ஆஸ்மா போன்ற நோய்த்தாக்கங்களுக்கு உள்ளானதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதனைக் கருத்தில் கொண்டு எதிர்காலத்தில் பிரதேச சபைக்குட்பட்ட வீதிகள் அனைத்தும் தார் மற்றும் கொங்கிறீற் இட்டு புனரமைக்கப்படவுள்ளதாகவும் கிரவல்கொண்டு புனரமைப்பு செய்யப்படமாட்டாது எனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (110)


## 1ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மனிதருக்குள் 20 04 1936



கர்த்தருக்குள் 18 04 2010

அமரர்

**திரு. சின்னத்தம்பி பாலசிங்கம் (டானியல்)**

(இளைப்பாறிய அதிபர்)

ஆண்டொன்று ஆனது அப்பப்பா!
ஆறுதில்லைத் துயரம் அப்பப்பா!
சோர்ந்து போனோம் சோகத்தால் அப்பப்பா!
சேர்ந்திருந்த காலத்தை மறவோம் அப்பப்பா!
காத்து வளர்த்த காலம் மறவோம் அப்பப்பா!
உள்ளம் உள்ளவரை உங்கள்
நினைவு மறையாது அப்பப்பா!.

74/9, இராமநாதன் வீதி
நாயன்மார்கட்டு
நல்லூர்.

- பேரமக்கள்.

(C/521)

தெளிந்த உண்மையும், கருத்துத் தூய்மையும் வெற்றியளிப்பது உறுதி. இவ்விரண்டையும் படைக்கலனாகக் கொள்ளும் எவரும் எத்தடையையும் எதிர்த்து வெற்றிபெறுவது உறுதி. - விவேகானந்தர் -

தினப்பதிப்பு
தினமுரசு THINAMURASU

இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212221811
thinamurasu@live.com
thinamurasupaper@hotmail.com

## பொறுப்புணர்ந்து செயற்படுவீர்

யாழ். குடாநாட்டு மக்களின் இன்றைய அவசியத் தேவைகள் குறித்து கவனம் செலுத்த வேண்டிய பொறுப்பு தமிழ்மக்களால் தெரிவுசெய்யப்பட்ட ஒவ்வொரு நாடாளுமன்ற உறுப்பினர்களின் தலையாய கடமையாகும்.

இக்கடமையை உணர்ந்த செயற்பாடுகளில் சில நாடாளுமன்ற உறுப்பினர்களே அதீத கவனம் செலுத்திவருவதை தமிழ்மக்களால் உணர்ந்து கொள்ள முடிகிறது.

யாழ். குடாநாட்டின் அபிவிருத்தியிலும், மக்களின் தேவைகளையும் நிறைவேற்றி வைப்பதற்கு மக்கள் பிரதிநிதிகள் அர்ப்பணிப்புடன் செயற்பட முன்வரவேண்டும்.

மக்களுக்கு சேவை செய்யவேண்டுமென்ற எண்ணத்தைக் கொண்டிராத நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமது எதிர்கால அரசியல் பயணத்தை எவ்வாறு மேற்கொள்ள வேண்டும் என்பதற்கான உத்திகளை வகுப்பதிலேயே காலத்தைக் கடத்தி வருகின்றனர். அவர்களின் இத்தகைய செயற்பாடு மக்களுக்கு அவர்கள் செய்யும் துரோகமாகக் கருதவேண்டும்.

அதேவேளை, அரசாங்கத்தின் கொள்கைகளையும், திட்டங்களையும் நடைமுறைப்படுத்தி வரும் அரச நிர்வாக இயந்திரத்தின் பொறுப்பாளிகளாகக் கருதப்படும் அதிகாரிகளின் பணி முக்கியமானதொன்றாகக் கருதப்படுகிறது.

தமது அதிகார வரம்புக்குட்பட்ட கடமைகளை அவர்கள் மேற்கொள்ளும்போது பல்வேறு விமர்சனங்களுக்கும் ஆளாகவேண்டிய சூழ்நிலைக்குத் தள்ளப்படுகிறார்கள்.

எத்தகைய சூழ்நிலைக்குள் அவர்கள் தள்ளப்பட்டாலும் மக்களுக்குத் தேவையானவற்றைச் செய்துகொடுக்கவேண்டிய கடமைப் பொறுப்பை மறந்துவிடக்கூடாது.

இச்சந்தர்ப்பத்தில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா யாழ். குடாநாட்டின் துரித அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பாக அதிகாரிகள் மத்தியில் உரையாற்றுகையில், அரச ஊழியர்களைப் பொறுத்தவரை தமது அலுவலகக் கடமைகளுக்கு அப்பால் சமூகக் கடமைகளையும் இணைத்து செயற்படவேண்டுமென்று கூறியிருப்பதை அனைத்து ஊழியர்களும் கவனத்தில் கொள்ளவேண்டும்.

அமைச்சரின் இக்கருத்து நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் பொருத்தப்பாடாகவே இருக்கும் என்பதை இங்கு சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

குடாநாட்டின் அபிவிருத்தி வேலைகளை பாரிய செயல்முறைத் திட்டத்தின் அடிப்படையில் ஒரு நிகழ்ச்சி நிரலுக்கு அமைவாகவே முன்னெடுத்துச் செல்லப்படவேண்டிய தேவை உண்டு என்பதை எவரும் மறந்துவிடக்கூடாது.

அரசாங்கத்தைப் பொறுத்தமட்டில் குடாநாட்டின் அபிவிருத்தியில் அதிக அக்கறை காட்டி வருவதைக் காணக்கூடியதாக உள்ளது.

நடந்து முடிந்த சம்பவங்களை மீட்டுப் பார்ப்பதில் எவ்வித பிரயோசனமுமில்லை. அப்படி மீட்டுப் பார்க்கும்போது அதற்கு எம்மால் பரிகாரம் காணமுடியாது என்பதை சம்பந்தப்பட்டவர்கள் உணர்ந்துகொள்ளவேண்டும்.

எனவே குட்டையைக் கிளறி பருந்துக்கு இரைதேடிக் கொடுக்கும் கைங்கரியத்தை விட்டு நடைபெறக்கூடியவற்றில் கவனம் செலுத்துவதே பொருத்தமான காரியமாக அமையும் என்பதை இங்கு சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

- ஆசிரியர் -


# வைத்தியர் இரவில் தங்குவதற்கு விடுதி வசதிகள் எதுவும் இல்லை!

## தினமுரசுச் செய்திக்குப் பணிப்பாளர் விளக்கம்

(யாழ்ப்பாணம்)

மருதங்கேணி வைத்தியசாலையில் இரவு நேரங்களில் வைத்தியர் தங்கியிருந்து சிகிச்சை வழங்குவதற்கான விடுதி வசதி இல்லாமையின் காரணமாகவே அங்கு கடமையாற்றும் வைத்தியர் பகலில் கடமையாற்றிவிட்டு இரவில் திரும்பி விடுவதாக யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ. கேதீஸ்வரன் தெரிவித்தார்.

மருதங்கேணி வைத்தியசாலையில் இரவு நேரங்களில் வைத்தியர் ஒருவர் கடமையில் இல்லாமை தொடர்பாக பொதுமக்கள் எதிர்நோக்கும் சிரமங்கள் குறித்து யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரிடம் கேட்டபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.



இவ்விடயம் குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், மருதங்கேணி வைத்தியசாலை கடந்த யுத்தத்தின்போது முழுமையாகச் சேதமடைந்திருந்தது. அதன் வெளிநோயாளர் சிகிச்சைப் பிரிவு மட்டுமே தற்சமயம் புனரமைக்கப்பட்டு இயங்கி வருகிறது. அதில் ஒரு வைத்தியர் மட்டுமே கடமையாற்றி வருகின்றார். அவர் தங்கியிருந்து இரவு நேரங்களிலும் கடமையாற்றுவதற்கு அங்கு விடுதி வசதி இல்லை. இதன் காரணமாகவே அவர் இரவு நேரங்களில் அங்கிருந்து திரும்பிவிடுகின்றார்.

இதனால், இத்தகைய நெருக்கடி தோன்றியுள்ளதாகத் தெரிவித்த அவர், தற்சமயம் என்றிப் திட்டத்தின் கீழ் மருதங்கேணி வைத்தியசாலை முழுமையாகப் புனரமைப்புச் செய்யப்படவுள்ளது. இதன் பின்னர் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்படும் எனவும் தெரிவித்தார். (பா)

# அடிப்படை வசதிகளற்ற நிலையில் முல்லைத்தீவு நகர பேருந்து நிலையம்

## பயணிகள் விசனம்

(முரசுமோட்டை)

முல்லைத்தீவு நகர பேருந்து நிலையத்தில் போதிய அடிப்படை வசதிகள் இன்றிக் காணப்படுவதால என்றுமில்லாதவாறு பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருவதாக பயணிகள் விசனம் தெரிவிக்கின்றனர்.

தற்போது மக்கள் மீளக்குடியேற்றம் செய்யப்பட்டுள்ள குறித்த பிரதேசத்தின் நகரத்தில் அமைந்துள்ள இப்பேருந்து நிலையத்தில் கழிப்பறை வசதிகள், குடிநீர் வசதி போன்ற அடிப்படை வசதிகள் இன்மையால் பயணம் செய்யும் பொதுமக்களும் மற்றும் சாரதிகளும் பெரும் சிரமங்களை எதிர்நோக்குவதாகத் தெரிவிக்கின்றனர்.

இதைவிட பயணிகள் தங்குவதற்கான இடவசதிகள் கூட அற்ற நிலையில் இப்பேருந்து நிலையம் காணப்படுவதாகவும் பயணம் செய்துவிட்டு நிலையத்தில் இறங்கும் பயணிகளும் இளைப்பாற முடியாத நிலை காணப்படுவதாகவும் தாகம் தீர்ப்பதற்குக்கூட குடிநீர் இன்றி அல்லல்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

குறித்த பேருந்து நிலையத்தில் தினமும் ஆயிரத்துக்கும் மேற்பட்ட பயணிகள் பயணம் செய்வதாகத் தெரிவிக்கப்படுகிறது.

எனவே, இது தொடர்பாக சம்பந்தப்பட்டவர்கள் பயணிகளின் நலனைக் கருத்தில் கொண்டு அடிப்படை வசதிகளை ஏற்படுத்தித் தருமாறு பயணிகளும் பேருந்து சாரதிகளும் கோரிக்கை விடுக்கின்றனர். (110)

# இன்று இறுதிக்கட்ட மீள் குடியமர்வு

(வடமராட்சி கிழக்கு)

கிளிநொச்சி மாவட்டத்தில் இறுதிக்கட்ட மீள்குடியமர்வு இன்று ஆரம்பிக்கப்படவிருப்பதாக செயலக வட்டாரத் தகவல்கள் தெரிவித்துள்ளன. குறித்த மாவட்டத்தில் மீதியாகவுள்ள 40 குடும்பங்கள் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் பிரிவில் குடியமர்த்தப்படவிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதில் மீள்குடியமரும் மக்கள் தொகையுடன் மாவட்டத்தில் இடம்பெயர்ந்த மக்கள் அனைவரும் மீளக்குடியமர்த்துவதற்கான நிலை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. மீளக்குடியமர்ந்த மக்களின் வாழ்வாதாரம் படிப்படியாக முன்னெடுக்கப்பட்டு வருவதோடு இவர்களுக்கு வங்கிகள் ஊடாக கடன் வழங்கும் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (100)

# பின்தங்கிய பிரதேசங்களில் உள்ள பெண்கள் துன்புறுத்தப்பட்டு வருவதை ஏற்கமுடியாது!

## கல்விப் பணிப்பாளர் ஆவேசம்



(யாழ். நிருபர்)

பெண்கள் சுதந்திரமாக நடமாட முடியாத நிலை பின்தங்கிய கிராமங்களில் மீண்டும் தலைதூக்கியுள்ளது. பொறாமைமிக்க ஆண்வர்க்கம் பின்தங்கிய பிரதேசங்களில் வசிக்கும் பெண்களைத் தொடர்ந்து துன்புறுத்தி வருவதை ஏற்றுக்கொள்ள முடியாது.

இவ்வாறு நல்லூர் பிரதேச செயலகம் நடத்திய சர்வதேச மகளிர் தினவிழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரை நிகழ்த்திய யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ. வேதநாயகம் குறிப்பிட்டார்.

நல்லூர் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் மகளிர் தின அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி தயாபரி கிரிதரன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

பெண்கள் சமூகத்தில் எத்தனையோ சுமைகளைத் தாங்கி நிற்கிறார்கள். ஆண்களைவிட பலமடங்கு வேலைகளை அவள் செய்ய வேண்டியுள்ளது. தனது அன்றாடக் கடமைகளுடன் கணவனுக்கு வேண்டிய கடமைகளையும் பிள்ளைகளுக்கு வேண்டிய கடமைகளையும் உணவு தயாரிப்பு, பிள்ளை பராமரிப்பு, சுற்றுச் சுழல் சுத்தம், வீட்டு நிர்வாகம் என்று எவ்வளவோ சுமைகளைத் தாங்கி நிற்கும் பெண்களை ஒவ்வொரு ஆணும் தனது தாயாக, மனைவியாக, மகளாக மதித்துப் போற்ற வேண்டும்.

ஆதிகாலத்தில் பெண்ணே குடும்பத் தலைவியாக இருந்தாள். குடும்பத்தின் தேவைகளை நிறைவு செய்பவளாக, குடும்பத்தை வழிநடத்துபவளாக, குடும்பத்தின் பாதுகாப்பு உத்திகளை வகுப்பவளாக பெண் செயறபட்டாள். காலப்போக்கில் ஆண்களால் அடக்கப்பட்டு ஒடுக்கப்பட்டு அடுப்பூதும் பெண்களுக்குப் படிப்பெதற்கு என்ற நிலைக்குத் தள்ளப்பட்டாள்.

ஆசிரியர்கள் பிள்ளைகளுக்கு வெறுமனே பாடம் சொல்லிக் கொடுப்பதோடு தமது கடமை முடிந்துவிட்டதாகக் கருத முடியாது. வகுப்பறையில் பிள்ளையை வாழ்க்கைக்கு உகந்தவனாக, ஒழுக்க சீலனாக, உயர் விழுமியப் பண்புள்ளவனாக உருவாக்க வேண்டிய பாரிய பொறுப்பு ஆசிரியர்களுக்கு உண்டு. ஆரோக்கியமான சமுதாயத்தை உருவாக்குவதற்கு ஆசிரியர்கள் அர்ப்பணிப்போடு செயற்பட வேண்டுமெனக் கேட்டுக் கொண்டார்.

யு.என்.எச்.சி.ஆர். சமூகசேவை அலுவலர் திருமதி பா. வைதேகி, நல்லூர் பிரதேச செயலர் பா. செந்தில்நந்தனன் உட்பட மற்றும் பலர் உரை நிகழ்த்தினர். இந்நிகழ்வில் மது ஒழிப்புத் தொடர்பான விழிப்புணர்வுக் கருத்து மற்றும் பட்டிமன்றம், கலை நிகழ்வுகள் என்பனவும் இடம்பெற்றன. (10)

# மாணவர்களின் ஆற்றல்கள் திறன்கள் நவீன உலகிற்கேற்ப மேம்படுத்தவேண்டும்

## அதிபர் மகேந்திரன் தெரிவிப்பு

(அச்சுவேலி)

மாணவர்களின் பெறுமதிமிக்க வெளிப்பாடுகளும் அவர்களின் பரீட்சைப் பெறுபேறுகளுமே ஒரு பாடசாலையின் கலவித்தரத்தினையும் அதன் சிறப்பினையும் வெளியுலகிற்கு எடுத்துக்காட்டுகின்றன. இவ்வாறு சிறுப்பிட்டி அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை அதிபர் நா.மகேந்திரராஜா தெரிவித்தார்.

அண்மையில் நடைபெற்ற ஆவரங்கால் ஸ்ரீவிஷ்ணு வித்தியாலய மாணவ முதல்வர்களுக்கான சின்னம் சூட்டும் வைபவத்தில் பிரமத விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில்:

மாணவர்களின் ஆற்றல்களும், திறன்களும் நவீன உலகின் போக்குக்கு ஏற்ப மேம்படுததப்படவேண்டும் இதற்காக மாணவர்களுக்கு வேண்டிய வழிகாடடல்களையும், நெறிப்படுத்தல்களையும் தாராளமாக வழங்க பாடசாலைகள் முன்வரவேண்டும்.

பாடசாலைகளில் பொதுப் பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களில் பலர் சித்தியடைகின்ற போதிலும் குறைந்த எண்ணிக்கையினரே சிறந்த பெறுபேற்றினை பெற்று பாடசாலைக்கு பெருமை சேர்க்கின்றார்கள். பெரும்பாலான பாடசாலைகளில் கல்விக்குரிய எல்லா வசதிகளும் காணப்படுகின்ற போதிலும் மாணவர்களில் பலர் அதைத் தமக்குச் சாதகமான முறையில் பயன்படுத்திக் கொள்ள தவறுவதாலேயே பெறுபேறுகளில் வீழ்ச்சித் தன்மையை காண்பிக்கின்றனர். இந்நிலை மாற்றமடைய வேண்டுமெனில் பெற்றோரும் தமது பங்களிப்பினை முழுமையாக பிள்ளைகளுக்கு வழங்க வேண்டும்.

கல்விச்சாலைகளில் கற்றல் செயற்பாடுகளுடன் ஒழுக்கத்திற்கும் முன்னுரிமை வழங்கப்படுவதாலேயே மாணவ முதல்வர் வருடாவருடம் புதிதாக நியமிக்கப்படுவதுடன் அவர்களுக்கு பொறுப்புக்களும் பகிர்ந்தளிக்கப்படுகின்றன. ஆகவே மாணவ முதல்வர்கள் தமது கடமைக்குக் குந்தகம் ஏறபடாத வகையில் எல்லா மாணவர்களையும் சகோதரத்துவத்துடன் வழிநடத்திக் கொள்ள வேண்டும் எனக் கூறினார் (03)




கொழும்பிலுள்ள விழுது ஆற்றல் மேம்பாட்டு மையத்தின் ஊடக கற்கைநெறி மாணவர்களும், விரிவுரையாளர்களும் தினமுரசு காரியாலயத்திற்கு வருகைதந்தபோது...

## வெளிவாரிப்பரீட்சை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக வெளிவாரிப்பட்டப்பதிவுகள் மற்றும் பரீட்சைகள் அலகினால் நடத்தப்படும் பொது மற்றும் சிறப்புக்கலைமாணித் தேர்வு பகுதி II 2008 பரீட்சை எதிர்வரும் மே மாதம் 15 ஆம் திகதி முதல் 31 ஆம் திகதி வரை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலும் வவுனியா வளாகத்திலும் நடைபெறவுள்ளது.

பரீட்சை தொடர்பான நேர அட்டவணைகளையும், பரீட்சை அனுமதி அட்டைகளையும் எதிர்வரும் 10 ஆம் திகதி முதல் வெளிவாரிப்பட்டப்பதிவுகள் மற்றும் பரீட்சைகள் அலகிலும் வவுனியா வளாகத்திலும் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

மேலதிக விபரங்களையும் 021 222 3612 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளலாம் எனப் பதிவாளர் அறிவித்துள்ளார்.

## எரிபொருள் நிரப்பு நிலையம் விரைவில் திறந்து வைப்பு

(அச்சுவேலி)

உடுப்பிட்டி பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தினால் யாழ்பாணம் - பருத்தித்துறை பிரதான வீதியில் புறாப் பொறுக்கி, ஆலடிப்பகுதியில் புதிதாக நிறுவப்பட்டு வரும் எரிபொருள் நிரப்பு நிலையத்தின் நிர்மாணப்பணிகள் நிறைவடைந்த நிலையில் பொதுமக்கள் பாவனைக்காக வெகு விரைவில் திறக்கப் படவுள்ளது.

பொதுமக்கள் மற்றும் வாகன ஓட்டுனர்களின் வசதி கருதி புதிதாக அமைக்கப்பட்ட இவ் எரிபொருள் நிரப்பு நிலையததினால் அப்பிரதேச மக்கள் எரிபொருட் தேவைகளுக்காக வேறு இடங்களுக்குச் செல்ல வேண்டிய சிரமம் தவிர்க்கப்படும் என தெரிவிக்கும் பிரதேச வாசிகள் இம் முயற்சிக்காக உடுப்பிட்டி பலநோக்குக் கூட்டுறவுச் சங்க செயற்பாடுகளைத் தாம் பாராட்டுவதாகவும் தெரிவிக்கின்றனர். (03)

## கோரிக்கைகளை அனுப்பிவைக்கவும்

(யாழ்ப்பாணம்)

பனங்களி உற்பத்தியில் ஈடுபடும் சங்கங்களுக்கு அதிக உற்பத்தி செய்யும் இயந்திரங்களைப் பெற்றுக்கொடுக்க பனை அபிவிருத்திச்சபை நடவடிக்கை எடுத்து வருவ்தாகத் தெரிவிக்கப்படுகின்றது.

பனங்களி உற்பத்தியில் ஈடுபடவுள்ள சங்கங்கள் தமது இயந்திரங்கள் தொடர்பான கோரிக்கையை சமாசம், பனை அபிவிருத்திச் சபையிடம் முன்வைக்க இருபபதால் தேவையான சங்கங்கள் எழுத்து மூலம் அனுப்பிவைக்குமாறு சமாசப்பொது முகாமையாளர் கோட்டுக் கொண்டுள்ளார்.

## மரக்கறிகளை திருடர்களிடமிருந்து பாதுகாக்க காவல் பணியில் விவசாயிகள்

(அச்சுவேலி)

அச்சுவேலி, ஆவரங்கால் பகுதிகளில் உள்ள விவசாய விளைநிலங்களில் அண்மைக்காலங்களில் இரவு நேரத் திருடர்கள் அதிகரித்திருப்பதாக அப்பகுதியைச் சேர்ந்த விவசாயிகள் பலரும் தெரிவிக்கின்றனர்.

இரவுவேளைகளில் விளைநிலங்களுக்குள் ஊடுருவும் இரவுத் திருடர்கள் வெங்காயம், பாகல், புடோல் பூசனி, பீற்றூட், கரட். வெண்டி, தக்காளி. கத்தரிக்காய் போன்ற மரக்கறிப் பயிர்களை அதிகளவில் களவாடிச் சென்றுவிடுவதனால் அறுவடைக்காகச் செல்லும் தாம் வெறுங்கையுடன் ஏமாந்து திரும்பவேண்டியுள்ளதாகத் தெரிவிக்கும் விவசாயிகள் இதனால் தமக்கு பல்லாயிரக்கணக்கில் நட்டம் ஏற்படுவதாகவும் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை சில பகுதிகளில் விவசாயிகள் சிறுகுழுக்களாக இணைந்து இரவுக்காவல் பணியில் ஈடுபட்டு வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது. (03)

# வீதி ஒழுங்கு விதிகளை அனுசரித்து விபத்துக்களைத் தவிர்த்துக் கொள்ளவும்




### பாதசாரிகள்

1. பாதசாரிகள் எப்பொழுதும் வாகனங்கள் வரும் வீதிகளிலிருந்து விலகி நடைபாதை அல்லது ஒற்றையடிப் பாதை இருப்பின் அதனை உபயோகித்தல் வேண்டும். நடைபாதை இல்லாது இருப்பின் வாகனப் போக்குவரத்தை எதிர்நோக்கி வீதியின் வலது பக்கமாகச் செல்லுதல் வேண்டும். இயன்றளவு வீதியின் பாவனையை வாகனப் போக்குவரத்துக்கு ஒதுக்குதல் வேண்டும்.

2. பாதசாரிகள் பெருவீதிகளில் வீதியைக் கடக்க வேண்டுமாயின் பாதசாரிக் கடவை அல்லது வீதியின் மேம்பாலம் அல்லது வீதியின் கீழ்ப்பால பாதசாரிக் கடவையை உபயோகித்தல் வேண்டும்.

3. ஒதுக்கப்பட்ட பாதசாரிக்கடவை இல்லாத பட்சததில் போக்குவரத்தின் தன்மைக்கேற்ப கடக்கமுன் போக்குவரத்தின் பாதுகாப்பான இடைவெளி வரும்வரை காத்திருந்து பாதையின் வலதுபக்கம், இடது பக்கம் பார்த்து மீண்டும் வலது பக்கம் பார்த்துவிட்டு பாதையைக் கடத்தல் வேண்டும்.

4. வீதிகளில் சிறுவர்கள் விளையாடுவதற்கு அனுமதிக்காதீர்கள். சிறுவர்களுடன் செல்லும் போது வாகனங்களுக்கு முன்னுரிமை கொடுதது வீதியிலிருந்து விலகி ஒதுக்குப்புறமாகச் செல்லுங்கள். சிறுயதிலிருந்தே பிள்ளைகளுக்கு வீதிப்பாதுகாப்புப் பற்றி அறிவுறுத்துங்கள். வீதி ஒழுங்கு விதிகளை மீறிச் செயற்படுவதனால் ஏற்படும் விளைவுகள பற்றி எடுத்துக் கூறுங்கள்.

5. பாதசாரிக் கடவையில் வீதியைக் கடக்கமுன் வாகனச் சாரதி தங்களைக் கண்டு வேகத்தைக் குறைத்து வாகனத்தை நிற்பாட்டுவதற்கு போதுமான அவகாசத்தைக் கொடுங்கள்.

6. பாதசாரிகளையும், வாகனப் போக்குவரத்தையும், கட்டுப்படுத்தும் பெலிகன் கடவையில் “சிகப்பு மனிதன்” சைகை குறியீடு இருக்கும் போதும், “பச்சை மனிதன்” ஒளிச் சமிக்ஞை விட்டு விட்டு எரியும் போதும் பாதையைக் கடவாதீர்கள். பாதையைக் கடப்பதற்கு “பச்சை மனிதன்” ஒளியூட்டு வரும் வரை காத்திருந்து பாதையைக் கடவுங்கள்.

### மிதிவண்டிகள்

1. முதலில் வீதியில் மிதிவண்டிகள் செலுத்துவதற்கு நீங்கள் தகுதியுடையவரா? என்பதையும் உங்கள் மிதிவண்டி பொறிமுறை ரீதியில் நல்ல நிலையில் உள்ளதா? என்பதையும் உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்.

2. மிதிவண்டி ஓட்டுபவர்கள் மிதிவண்டிகள் ஓட்டப்பாதையிருப்பின் அதனையே உபயோகித்தல் வேண்டும். இல்லாதவிடத்து இடது நடைபாதைக்கு அருகாமையாக ஒருவர்பின் ஒருவராக மிதிவண்டியை ஓட்டிச்செல்ல வேண்டும். எந்தவொரு சந்தர்ப்பத்திலும் இரண்டுபேருக்கு அதிகமாக பக்கம் பக்கமாகச் செல்லுதல் கட்டாயமாகத் தவிர்க்கப்படுதல் வேண்டும்.

3. மிதிவண்டி ஓட்டும்போது நகர்ந்து கொண்டிருக்கும் இன்னொரு வாகனத்தை அல்லது அவருடன் போய்க்கொண்டிருக்கும் மற்றுமோர் மிதிவண்டி ஓட்டுபவரைப் பிடித்துச் செல்லுதல் கூடாது. சைகைகள் கொடுக்கும் நேரம் தவிர்ந்த ஏனைய வேளைகளிலும், திரும்பும் போதும் இரு கைகளையும் கைபிடிச் சட்டத்தில் பிடித்திருத்தல் வேண்டும். போக்குவரத்துக்கிடையில் புகுந்து வளைவு, நெளிவாக மிதிவண்டியை ஓட்டிச் செல்லுதல் தவிர்க்கப்பட வேண்டும்.

4. சிறு வீதி ஒன்றிலிருந்து பிரதான வீதிக்குப் புகும் பொழுது மிகக் கவனமாக இருத்தல் வேண்டும். பிரதான வீதிக்குள் புகுமுன் வாகனத்தை நிறுத்தி பிரதான வீதியில் செல்லும் வாகனத்துக்கே முன்னுரிமை கொடுத்தல் வேண்டும்.

5. ஒரு வழிப் பாதையில் அல்லது சுற்றுவட்டப் பாதையில் போக்குவரத்து திசைக்கெதிராகச் செல்லுதல் கூடாது. சுற்றுவட்டப் பாதையில் வலது பக்கமாக அண்மையில் வரும் வாகனங்கள் போவதற்கு இடமளிக்க வேண்டும்.

# மக்களின் வரிப்பணத்தில் ஊதியம் பெறும் நாம் அவர்களுக்கு நியாயமான சேவைகளை வழங்கவேண்டும்

## ஜனாதிபதி சட்டத்தரணி ஞானதாசன் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

சட்டத்தின் ஆட்சியில் முக்கிய இடம் வகிப்பது நீதிமன்றமே. மக்கள் நீதிமன்றத்தை நாடி வரும்போது அவர்களுக்குச் சிறப்பான சேவையை வழங்கவேண்டும். இவ்வாறு ஜனாதிபதி சட்டத்தரணி சொலிசிஸடர் ஜெனரல் ஏ.ஞானதாசன் தெரிவித்தார்.

யாழ். உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலக கேட்போர்கூடத்தில் நடைபெற்ற நீதிமன்ற முகாமைத்துவ உத்தியோகத்தர்களுக்காக நடத்தப்பட்ட பயிற்சியில் பங்குபற்றியவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

வடமாகாண முகாமைத்துவ அபிவிருத்தி நிறுவகத்தின் பணிப்பாளர் சி.கிருஷ்ணானந்தன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் அவர் மேலும் தெரிவித்ததாவது -

இலங்கையின் அரசியல் யாப்பில் பொதுச்சேவைக்கு பொதுசன ஊழியர் என்று வரைவிலக்கணம் கூறப்படுகிறது.

அதாவது பொது மக்களுக்குச் சேவை செய்பவர் என்று பொருள். இதனை அனைவரும் விளங்கிக்கொள்ள வேண்டும்.

நாங்கள் எல்லோரும் பொதுசன ஊழியர்கள். அவர்களின் வரிப்பணமே எமக்கு ஊதியமாக வழங்கப்படுகிறது. எனவே, நாம் மக்களுக்குச் சரியான முறையில் நியாயமான சேவையை வழங்கவேண்டும்.


பொதுசன ஊழியர்களுக்கு ஒரு நம்பிக்கைப் பொறுப்பு வழங்கப்பட்டுள்ளது. அந்தப் பொறுப்பிலிருந்து எவரும் விலகமுடியாது.

இவ்வாறு நடத்தப்படும் பயிற்சிகளின் மூலம் ஊழியர்கள் மேலும் சிறப்பான சேவையை வழங்க முடியும். உங்கள் பயிற்சிகளின் விளைவு பொது மக்களையே சென்றடைகிறது.

ந்திமன்ற சேவையைப் பொறுத்தவரையில் எவ்வளவு விரைவாக சேவையாற்ற முடியுமோ அந்தளவு வேகமாகச் சேவையாற்ற வேண்டும்.

வார இறுதியில் மாலையில் ஒருவருக்குப் பிணைவழங்கப்படின் .அந்த ஆவணங்கள் சரியாக, விரைவாகப் பூர்த்தி செய்யப்படாவிட்டால், குறித்த நபர் 2 நாட்கள் தாமதித்தே பிணையில் செல்ல வேண்டிய நிலை ஏற்படும்.

எமக்குப் பல இடங்களில் இருந்தும் பலவிதமான பிரச்சினைகள் வரலாம். நாம் பிரச்சினையின் ஒரு பகுதியாக இருக்கிறோமா அல்லது தீர்வின் ஒரு பகுதியாக இருக்கிறோமா



என்று பார்க்க வேண்டும்.

நாம் எப்போதும் தீர்வின் ஒரு பகுதியாகவே இருக்க வேண்டும். அதன்மூலம் நல்ல ஒரு தீர்வினை அடையலாம் எனத் தெரிவித்தார்.

இந் நிகழ்வில் சாவகச்சேரி மாவட்ட நீதிபதி மா.கணேசராஜா, பருத்தித்துறை மாவட்ட நீதிபதி ஸ்ரீநிதி நந்தசேகரன், ஊர்காவற்றுறை நீதிபதி ஜோய் மகிழ் மகாதேவா, பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் மதுமதி வசந்தகுமார், ஆளுநரின் செயலாளர் எஸ்.ரங்கராஜன், ஓய்வு நிலை நீதிபதி சரோஜினி இளங்கோவன் ஆகியோர் உட்பட மற்றும் பலர் கலந்துகொண்டனர். (கா)

# புதுவருட விளையாட்டு விழா

(தெல்லிப்பளை)

தெல்லிப்பளைப் பிரதேச செயலகமும், தெல்லிப் பளைப் பொலிஸாரும் இணைந்து எதிர்வரும் 22, 23 ஆம் திகதிகளில் புதுவருட விளையாட்டு விழா வொன்றினை நடத்தவுள்ளனர்.

இவ்வளையாட்டு விழா முதல் நாளான 22 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை தெல்லிப்பளைப் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் மாலை கட்டுதல், கோலம் போடுதல் ஆகிய போட்டிகள் நடத்தப்படவுள்ளன. இரண்டாவது நாளான 23 ஆம் திகதி சனிக்கிழமை நிகழ்வுகள் காலை 7 மணிமுதல் இரவு 7 மணிவரை மல்லாகம் விசாலாட்சி பாடசாலைக்கு அருகாமையில் பொலிஸாரி னால் புதிதாக அமைக்கப்பட்டுள்ள மைதானத்தில் நடை பெற விருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இவ் விளையாட்டுப் போட்டியை முன்னிட்டு ஆண், பெண்களுக்கான சைக்கிள் ஓட்டம், மரதன் ஓட்டம் மற்றும் பாரம் பரிய விளையாட்டுக்களான கரப்பந்தாட்டம் முட்டி உடைத்தல், போர்த் தேங்காய் அடித்தல், கயிறு இழுத்தல் என்பனவும் இரவு கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளதாகவும் பிரதேச செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

# கொடுப்பனவுகள் வழங்கப்படுகிறது

(அச்சுவேலி)

கடந்த வருடம் நடைபெற்ற கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சை வினாத்தாள் மதிப்பிட்டுப் பணிகளில் கலந்துகொண்ட ஆசிரியர்கள் மற்றும் அலுவலர்களுக்கான கொடுப்பனவுகள் வழங்கப்பட்டு வருகின்றன.

கடந்த டிசம்பர் மாத இறுதிப்பகுதியில் ஆரம்பமாகி ஜனவரி ஆரம்பப் பகுதிவரை இடம்பெற்ற இவ் வினாத்தாள் மதிப்பீட்டுப் பணிகளில் ஈடுபட்டவர்களுக்கான கொடுப்பனவுகள் காசோலைகளாக அவர்களது சொந்த முகவரிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

மேற்படி காசோலையினை மக்கள் வங்கிக் கிளைகளின் மூலம் ஊழியர்கள் பணமாகப் பெற்று வருகின்றனர். (03)

# புதிய செயலாளர் நியமனம்

(வடமராட்சி)

பருத்தித்துறை நகரசபை அலுவலகத்தின் புதிய செயலாளராக நியமிக்கப்பட்ட ந.செவ்வேள் இன்று புதன்கிழமை தனது பதவியைப் பொறுப்பேற்கவுள்ளார்.

வடமராட்சி தெற்கு மேற்குப் பிரதேச சபையின் பிரதம முகாமை உதவியாளராக கடமையாற்றிய இவர் பதவியுயர்வுடன் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

நகர சபையில் முன்னர் சபைச் செயலாளராகக் கடமையாற்றிய அ.நடராஜா ஓய்வு பெற்றுச் சென்றதை அடுத்தே இந்தப் புதிய நியமனம் செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (100,18)

# உளரீதியான பாதிப்புக்களை ஏற்படுத்தும் இடமாற்றங்கள்

## கவலை வெளியிடும் ஆசிரியர்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்திலிருந்து வன்னிப் பகுதிக்கு இடமாற்றம் செய்யப்படும் பெண் ஆசிரியர்கள் பல்வேறு விதமான இடையூறுகளை எதிர் நோக்குவதாகத் தெரிவிக் கப்படுகிறது.

இந்தப் புதிய ஆசிரியர் இடமாற்ற நடவடிக்கையால் கூடுதலான பெண் ஆசிரியர்கள் உளரீதியா கப் பாதிக்கப்படுவதாக கல்விச் சமூகத்தினர் தெரிவித்தனர்.

கூடுதலாக இளம் பெண் ஆசிரியர்கள் தமது குழந்தைகள், குடும்பங்களை உரியவாறு பாதுகாக்க முடியாமலும் மற்றும் நோய்வாய்ப்பட்டவர்களுமே இந்த இடமாற்றத்தால் பல்வேறுபட்ட சிரமங்களுக்கு இலக்காவதுடன், உள ரீதியாகவும் பாதிக்கப்படுவதாகச் சுட்டிக் காட்டப்பட்டது.

இப்படிப்பட்ட இளம் பெண் ஆசிரியர்களின் இடமாற்றத்தை இரத்துச் செய்வதற்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (வி)

# இயற்கை அனர்த்தத்தால் கிளிநொச்சியில் பல ஏக்கர் பயிர்ச்செய்கை அழிவடைந்துள்ளது

(முரசுமோட்டை)

கிளிநொச்சி மருதநகர் பகுதியில் காலபோக பயிர்ச்செய்கையை மேற்கொண்ட விவசாயிகள் வெள்ளப்பெருக்கு மற்றும் நோய்த் தாக்கங்களினால் தமது பயிர்கள் அழிவடைந்துள்ளதாகக் கவலை தெரிவிக்கின்றனர்.

இதில் குறித்த பகுதியில் 600 வரையான விவசாயிகள் காலபோக நெற்செய்கையில் ஈடுபட்டுள்ளதாகவும், இதில் 182 விவசாயிகள் வங்கிக் கடன்களைப் பெற்று விவசாய செய்கையை மேற்கொண்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட காலபோகப் பயிர்ச்செய்கையில்1400 ஏக்கர் கடந்த காலங்களில் ஏற்பட்ட மழை வெள்ளத்தால் அழிவடைந்துள்ளதாகவும், 358 ஏக்கர் நோய்த் தாக்கங்களினால் அழிவடைந்துள்ளதாக விவசாயிகள் தரப்பில் தெரிவிக்கப்படுகிறது.

வங்கிகளின் மூலம் விவசாயக் கடனைப் பெற்றுப் பயிர்ச் செய்கையை மேற்கொண்ட நிலையின் இவ்வாறான இயற்கை அழிவுகளினால் தாம் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ள தாகவும் தமது வாழ்வாதாரமும் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அவர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

மக்கள் வங்கியூடாக 93 விவசாயிகளும், கொமர்ஷல் வங்கியூடாக 40 விவசாயிகளும், இலங்கை வங்கியூடாக 40 விவசாயிகளும், ஹற்றன் நஷனல் வங்கியூடாக 9 விவசாயிகளும் கடனைப்பெற்று பயிர்ச்செய்கையை இவர்கள் மேற்கொண்டிருந்தனர். (110)

## ஸ்ரீதரின் இன்றைய பலன்

(20.04.2011 – புதன்கிழமை)

**பஞ்சாங்கக் குறிப்புக்கள்**

பஞ்சாங்கக் குறிப்புகள், கர வருஷம் சித்திரை 7 ஆம் நாள்.
இராகுகாலம் 12.02–1.32, சுபநேரம் 4.32 –6.02, நட்சத்திரம் விசாகம் மு.ப 11.24வரை, திதி: திருதியை பி.இ 3–16 வரைக்கும்.

**இரகுநாதையர் பஞ்சாங்க கணிப்பை அடிப்படையாகக் கொண்டது**

மேடம்:– நற்செய்தி, வழிபாட்டில் சமயப்பணி, மனமகிழ்ச்சி.

ரிஷபம்:– குதூகலம், தேகாரோக்கியம், மேலதிகாரிகள் பாராட்டு.

மிதுனம் :– கூடிய உழைப்பு, முயற்சி பலிதம், வேண்டாத நிகழ்வு.

கடகம்:– நினைத்தது கைகூடும், மனநிம்மதி, தேகாரோக்கியம்.

சிம்மம்:– நற்செய்தி, மனமகிழ்ச்சி, கடின உழைப்பு.

கன்னி :– மனமகிழ்ச்சி, நற்செய்தி, மேலதிகாரி மதிப்பு.

துலாம் :– காரியத்தடை, மன உளைச்சல், வேண்டாத நிகழ்வு.

விருச்சிகம்:– பணவரவு, மனமகிழ்ச்சி, கடின உழைப்பு.

தனுசு:– முயற்சி பலிதம், நற்செய்தி, தேகாரோக்கியம்.

மகரம்:– உண்டி விருப்பு, மனமகிழ்ச்சி, பணவரவு.

கும்பம் :– குதூகலம், இன்ப உணர்வு, கடின உழைப்பு.

மீனம்:– முயற்சி வீண், காரியத்தடை, பணவரவு.



யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களின் அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் யாழ். செயலக மண்டபத்தில் அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா தலைமையில் நடைபெற்றது. இதில் கலந்துகொண்டிருந்த கிளிநொச்சி, யாழ்ப்பாண அரச அதிபர்களையும் பாராளுமன்ற உறுப்பினர்களையும் நிகழ்வில் கலந்துகொண்ட திணைக்களத் தலைவர்களையும் காணலாம். (படம்: தமிழ்வாணன்)

# இலங்கையில் முதலீடுகளை மேற்கொள்ளுமாறு பங்களாதேஷ் வர்த்தகர்களுக்கு ஜனாதிபதி அழைப்பு

(டாக்கா)

**பங்களாதேஷிக்கான மூன்று நாள் உத்தியோக பூர்வ விஜயத்தை மேற்கொண்டுள்ள ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஸவுக்கும் அந்த நாட்டின் பிரதமர் ஷேக் ஹசீனாவுக்கும் இடையில் முக்கிய சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது.**



இரண்டு நாடுகளினதும் தலைவர்களுக்கு இடையே நேற்றுமுன்தினம் மாலை இடம்பெற்ற இந்தச் சந்திப்பின் போது இருதரப்பினருக்கும் முக்கியத்துவம் வாய்ந்த பல்வேறு விடயங்கள் குறித்துக் கருத்துக்கள் பரிமாறப்பட்டதாக ஜனாதிபதியின் ஊடக இணைப்புச் செயலாளர் விஜயானந்த ஹேரத் கூறினார்.

2016 ஆம் ஆண்டளவில் குறிப்பிடத்தக்களவு பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்திக்கொள்வது தொடர்பாக இந்தச் சந்திப்பின் போது விரிவாக ஆராயப்பட்டுள்ளது.

இரு நாடுகளுக்கும் இடையிலான வரத்தக கொடுக்கல் வாங்கல்களை மேம்படுத்துவது தொடர்பாகவும் முதலீட்டு சந்தர்ப்பங்களை பாதுகாத்துக் கொள்வது குறித்தும் இதன்போது கவனம் செலுத்தப்பட்டதாக ஜனாதிபதியின் ஊடக இணைப்புச் செயலாளர் விஜயானந்த ஹேரத் குறிப்பிட்டார்.

இலங்கையின் வர்த்தகர்கள் பங்களாதேஷில் முதலீடுகளை மேற்கொண்டுள்ளதாக பிரதமர் ஷேக் ஹசீனாவின் கவனத்திற்குக் கொண்டு வந்த ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இலங்கையில் முதலீடுகளை மேற்கொள்வதற்கு முன்வருமாறு பங்களாதேஷ் வர்த்தக சமூகத்தினருக்கு அழைப்பு விடுத்துள்ளார்.

அம்பாந்தோட்டை, மற்றும் கொழும்பு துறைமுகங்களை பங்களா தேஷின் பொருளாதார செயற்பாடுகளுடன் தொடர்புபடுத்துவது குறித்தும் இரண்டு நாடுகளினதும் அரச தலைவர்கள் கலந்துரையாடியதாக தெரி விக்கப்படுகின்றது.

இரண்டு நாடுகளினதும் பொருளாதாரத்தில் முக்கிய பங்கு வகிக்கும் விவசாயம் மற்றும் கடற்றொழில் ஆகிய துறைகளில் கையாளப்படும் தொழில்நுட்ப முறைமைகள் குறித்தும் இந்தச் சந்திப்பில் கவனம் செலுத்தப்பட்டதாக விஜயானந்த ஹேரத் கூறினார்.

விவசாயம் மற்றும் கடற்றொழில் துறையின் மேம்பாட்டுக்காக நடத்தப்படும் மாநாட்டின் செயலாளர் நாயகம் அலுவலகத்தினை பங்களாதேஷில் ஸ்தாபிக்கவும் முதலாவது செயலாளர் நாயகம் பதவிக்கு இலங்கையர் ஒருவரை நியமிக்கவும் இதன் போது ஆலோசிக்கப்பட்டுள்ளது.

பயங்கரவாதத்திற்கு எதிரான மனிதாபிமான நடவடிக்கையின் போது இலங்கைக்கு எதிர்மாறான கருத்துக்களைக் கொண்டிருந்தவர்களுக்கு எதிராக செயற்பட்டமைக்காக ஜனாதிபதி பங்களாதேஷ் பிரதமருக்கு நன்றி தெரிவித்துள்ளார்.

இத்தகைய ஒத்துழைப்புக்களை தொடர்ந்தும் எதிர்பார்ப்பதாகவும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கூறியுள்ளார்.

# முதலாவது ஆவணத்தை தயாரிக்கிறது ஆணைக்குழு

(கொழும்பு)

ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டுள்ள கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு தனது முதலாவது ஆவணத்தை தயாரிக்க ஆரம்பித்துள்ளதாகத் தெரிய வருகிறது.


ஆவண அறிக்கை தயார் செய்யப்பட்டதன் பின்னர் அது செம்மைப்படுத்தப்படுமென கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் ஊடகப் பணிப்பாளர் லக்ஸ்மன் விக்ரமசிங்க தெரிவித்தார்.

இதுவரை பெறப்பட்ட சாட்சிகளை அடிப்படையாகக் கொண்டு குறித்த ஆவணம் தயாரிக்கப்பட்டு வருவதாக அவர் குறிப்பிட்டார்.

எதிர்வரும் 15ஆம் திகதிக்கு முன்னர் இறுதி ஆவண அறிக்கையைத் தயாரித்து முடிப்பதற்கு எதிர்பார்த்துள்ளதாக கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் ஊடகப் பணிப்பாளர் கூறினார்.

# கப்பக் குழுக்கள் கோலோச்ச அரச ஆதரவே காரணமாகும்

## ஐ.தே.கட்சி குற்றச்சாட்டு



(கொழும்பு)


இலங்கையில் கப்பக் குழுக்கள் கோலோச்ச அரச ஆதரவே காரணம் என ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் கரு ஜயசூரிய குற்றம் சாட்டியுள்ளார்.

இலங்கையில் இடம்பெறும் கப்பம் கோரல் சம்பவங்களில் அமைச்சர்களின் ஆதரவு பெற்ற பாதாள உலகக்கும்பல்களின் உறுப்பினர்களும், சட்டத்தையும் ஒழுங்கையும் பாதுகாக்க வேண்டிய பொலிசாரும் இணைந்து தொடர்புபட்டிருப்பதற்கு அவர்களுக்கு வழங்கப்படும் அரச ஆதரவே காரணமாகும்.

அந்த வகையில் இலங்கையில் நடைபெறும் கப்பம் கோரல் சம்பவங் களுக்கு முற்றுமுழுதாக அரசாங்கமே பொறுப்புக் கூற வேண்டும். அதற்கான ஆதாரங்கள் இப்போது வெளிவரத் தொடங்கியிருக்கின்றன.

அண்மைக்காலமாக வெளிவரத் தொடங்கியிருக்கும் மீன்சந்தைக் கப்பம் கோரல்கள், கிராண்ட்பாஸ் கப்பம் கோரல் சம்பவம் என்பன அதற்கான சிறந்த எடுத்துக்காட்டுகளாகும்.அவற்றில் சம்பந்தப்பட்டிருப்பவர்கள் அரசாங்கத்தின் ஆசியைப் பெற்ற குண்டர்கள் என்பதை முழு நாடுமே அறியும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# கோதுமை மாவின் விலையை பிறிமாவும் அதிகரித்தது



(கொழும்பு)

கோதுமை மாவின் விலையை செரண்டிப் நிறுவனம் அதிகரித்துள்ள நிலையில் பிறிமா நிறுவனமும் அதிகரித்துள்ளது.

இதன்படி பிறிமா நிறுவனம் ஒரு கிலோ கோதுமை மாவின் விலையை 4 ரூபா 10 சதத்தினால் அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வெதுப்பக உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் என்.கே.ஜெயவர்தன இதனை தெரிவித்துள்ளார்.

நேற்று நடைமுறைக்கு வரும் வகையில் இந்த விலை அதிகரிப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

உலக சந்தையில் கோதுமைக்கான விலை அதிகரித்துள்ள நிலையில், இந்த அதிகரிப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை மாவின் விலை அதிகரிக்கப்பட்டதுடன், பாண் விலை சீர்திருத்தம் தொடர்பில் இதுவரையில் தீர்மானிக்கப்படவில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

பாணின் விலை பெரும்பாலும் அதிகரிக்கலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

# கொழும்பு மாநகரசபை மைதானத்தில் ஒரேமேடையில் மேதினக்கூட்டம்



(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் அங்கம் வகிக்கும் அரசியல் கட்சிகள் இம்முறை ஒரே மேடையில் மே தினக் கூட்டத்தை நடத்துவதற்கு தீர்மானித்துள்ளன.

இம்முறை இந்த மே தினக் கூட்டம் கொழும்பு மாநகர சபை மைதானத்தில் நடைபெறவுள்ளதாக ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

இம்முறை ஐக்கிய மே தினமாக அனுஷ்டிக் கப்படும் மே தின ஊர்வலம் கொழும்பு கெம்பள் மைதானத்தில் பிற்பகல் இரண்டு மணிக்கு ஆரம்பமாகவுள்ளதாக அமைச்சர் தெரிவித்துள்ளார்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சி தலைமையில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் சில முக்கிய அரசியல் கட்சிகள் சார்பில் வெவ்வேறான இடங்களில் ஆரம்பமாகும் அனைத்துப் பேரணிகளும் பொதுக் கூட்டம் நடைபெறும் இடத்தை வந்தடையவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அனைத்துக் கட்சிகளினதும் பிரதிநிதிகள் கலந்துகொள்ளும் மே தினக் கூட்டம் அன்றைய தினம் மாலை வேளையில் கொழும்பு மாநகர சபை மைதானத்தில் நடைபெறும் என ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# இலங்கையில் இடம்பெற்ற அழிவிற்கு மொழிப்பிரச்சினையே பிரதான காரணம்

## என்கிறார் அமைச்சர் ராஜித

(கொழும்பு)

இலங்கையில் இதுவரை காலமும் இடம்பெற்ற பாரிய அழிவிற்கு மொழிப் பிரச்சனையே பிரதான காரணியென அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது,

ஏனையவர்களின் மொழியைக் கற்றுக கொள்வதன் மூலம் தேசிய ஒருமைப்பாட்டை ஏற்படுத்தமுடியும். தமிழ் மொழி தெரியாது என்று கூறுவது உண்மையில் வெட்கப்பட வேண்டிய விடயமாகும்.

சிங்கள மற்றும் ஆங்கில மொழிகளை மட்டும் தெரிந்து வைத்திருப்பதில் பயனில்லை.

நாட்டின் அனைத்துப் பிரஜைகளும் ஏனைய இன மக்களின் மொழிகளை அறிந்து வைத்திருக்க வேண்டும். இவ்வாறு மொழியறிவு காணப்பட்டால்



ஏனைய இனங்களுக்கு இடையில் நல்லுறவு ஏற்பட வாய்ப்பு உள்ளது.

நாட்டில் இடம்பெற்ற பாரிய அழிவிற்கு மொழிப் பிரச்சினையே பிரதான காரணியாகும்

மேற்குலக நாடுகளின் தலையீடுகளை முறியடிப்பதற்கு அனைவரும் ஒத்துழைக்க வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார்.

# உலகக் கிண்ணப் போட்டி குறித்து சர்ச்சை

பத்தாவது உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டிகள் முடிவடைந்து சில நாட்களே ஆகியுள்ள நிலையில், 2015 ஆம் ஆண்டு நடைபெறவுள்ள அடுத்த உலகக் கிண்ணப் போட்டி குறித்த சர்ச்சைகள் அதற்குள்ளாகவே தொடங்கிவிட்டன.

பதினோராவது உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டிகளை அவுஸ்ரேலியாவும், நியூசிலாந்தும் இணைந்து 2015 ஆம் ஆண்டு நடத்தவுள்ளன.

அந்த உலகக் கிண்ணப் போட்டிகளின் போது டெஸ்ட் கிரிக்கெட்டில் தற்போது விளையாடி வரும் பத்து நாடுகள் மட்டுமே பங்கு பெற முடியும் என சர்வதேச கிரிக்கெட் சபை எடுத்துள்ள முடிவுக்கு, அந்த அமைப்பில் டெஸ்ட் போட்டிகளில் இன்னமும் விளையாடாத ஐ.சி.சியின், உறுப்பு நாடுகள் எதிர்ப்புத் தெரிவித்துள்ளன.

தற்போது சர்வதேச கிரிக்கெட் சபையில் 105 நாடுகள் உறுப்பினர்களாக உள்ளன. இதில் டெஸ்ட் போட்டிகளில் விளையாடாத 95 நாட்டைச் சேர்ந்த உறுப்பினர்கள் தங்களது அடுத்த கட்ட நடவடிக்கை குறித்து உயர்மட்டப் பேச்சுவார்த்தைகளைத் தொடங்கியுள்ளனர்.

உலகக் கிண்ணப் போட்டிகள் 50 ஓவர்களைக் கொண்ட ஒரு நாள் போட்டியாக தற்போது இருக்கும் நிலையில், சர்வதேச கிரிக்கெட் சபையின் இந்த முடிவானது பல பிரச்சினைகளைத் தோற்றுவித்துள்ளது.

உதாரணமாக ஐ.சி.சி.யின் ஒரு நாள் போட்டிகள் தரப் பட்டியலில், டெஸ்ட் போட்டிகளில் இதுவரை விளையாடாத அயர்லாந்து நாட்டு அணி, டெஸ்ட் போட்டிகளில் விளையாடி வரும் சிம்பாப்வே நாட்டை விட மேலிடத்தில் இருந்தாலும், அடுத்த உலகக் கிண்ணப் போட்டிகளில் அயர்லாந்து அணி பங்கு பெற முடியாமல் போகும் நிலை உருவாகும். ஆகவே இது தொடர்பாக தாங்கள் சட்ட நடவடிக்கை எடுப்பது குறித்து ஆலோசித்து வருவதாக அந்நாடு கூறியுள்ளது.

ஐ.சி.சி.யின் இந்த நடவடிக்கையை முறைகேடான ஒன்று என கென்ய கிரிக்கெட் சபையின் தலைமைச் செயல் அதிகாரி டாம் சியர்ஸ் பி.பி.சி.யிடம் தெரிவித்துள்ளார்.

2019 ஆம் ஆண்டு இடம் பெறவுள்ள உலகக் கிண்ணப் போட்டிகளுக்கு தகுதிச் சுற்றுகள் இருக்கும் என்று அறிவித்துள்ள ஐ.சி.சி. அதை ஏன் அடுத்து நடைபெறவுள்ள 2015 ஆம் ஆண்டு போட்டிகளில் நடைமுறைபடுத்தவில்லை என்றும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

நடைபெற்று முடிந்த 10 ஆவது உலகக் கிண்ணப் போட்டிகளில் பங்கு பெற்ற கனடா நாட்டு அணி அடுத்த உலகக் கிண்ணத் தொடரில் பங்குப் பெற முடியாத நிலை தோன்றியுள்ளது. இது தமக்குப் பெரியதோர் அடி என கனடா நாட்டு கிரிக்கெட் அணியின் பயிற்சியாளரான புபுது தஸ்நாயக்க பி.பி.சி.யிடம் தெரிவித்துள்ளார்.

இத்தாலி கிரிக்கெட் அணியின் மேலாளரும், அந்நாட்டின் கிரிக்கெட் சபையின் தலைமை அதிகாரியுமான லூக் புர்னோவும் ஐ.சி.சி.யின் இந்த முடிவுக்கு எதிர்ப்புத் தெரிவித்துள்ளார்.

# பயிற்சியாளராக?



(லண்டன்)

இந்திய கிரிக்கெட் அணியின் பயிற்சியாளராக இங்கிலாந்து கிரிக்கெட் பயிற்றுநர் ஆன்டி பிளவர் முயற்சி செய்து வருவதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்தியா உலகக் கிண்ணத்தை வென்றதற்குப் பின்னர் இந்திய அணியின் பயிற்றுநராக இருந்த கரி கிறிஸ்டன் பதவியை இராஜினாமாச் செய்தார். இந்நிலையில் அடுத்த பயிற்றுநரைத் தேர்வு செய்வதற்கான பட்டியலை இந்தியக் கிரிக்கெட் சபை தயார் செய்தது. இந்தப் பட்டியலில் ஆன்டி பிளவர் பெயர் இடம் பெற்றுள்ளதாக லண்டன் பத்திரிகை ஒன்று தெரிவித்துள்ளது. இதனையடுத்து இந்தப் போட்டியில் ஆன்டி பிளவருக்கு அதிக வாய்ப்பு இருப்பதாகக் கூறப்படுகிறது.

# நடந்திருக்கலாம் சூதாட்டம்

(ஹொங்கொங்)

ஆறு ஓவர்கள் கிரிக்கெட் போட்டி ஹொங்கொங்கில் கடந்த ஆண்டு நடந்தது. இந்தப் போட்டியில் நியூசிலாந்து அணி வீரர்கள் டப்பே, நதன் மக்கலம், ஸ்டைரிஸ் ஆகியோர் கலந்து கொண்டு விளையாடினார்கள். இந்தப் போட்டியில் பங்கேற்ற வீரர்களுக்கு விருந்து அளித்த வைர வியாபாரி ஒருவர் வீரர்களுக்கு விலை உயர்ந்த பொருட்களைப் பரிசாகக் கொடுக்க முயன்றுள்ளார்.

இதனால் சந்தேகம் அடைந்த நியூசிலாந்து வீரர்கள் நடந்த இந்த சம்பவம் குறித்து தங்கள் நாட்டு கிரிக்கெட் சபைக்குத் தெரிவித்தனர்.

இது குறித்து நியூசிலாந்து கிரிக்கெட் சபை சர்வதேச கிரிக்கெட் சபைக்குத் தகவல் தெரிவித்துள்ளது. இந்தச் சம்பவம் குறித்து சர்வதேச கிரிக்கெட் சபை ஊழல் தடுப்பு குழு விசாரணை நடத்தி வருகிறது. இந்தப் போட்டியில் சூதாட்டம் நடந்திருக்கலாம் என்று பரவலாகப் பேச்சுக் கிளம்பி இருக்கிறது.

# கவனம் செலுத்துவதில்லை




(லண்டன்)

தற்போது விளையாடும் இளம் சுழற்பந்து வீச்சாளர்கள் பந்தைத் திரும்புவதில் கவனம் செலுத்துவதில்லை. அவர்கள் துல்லியமாகப் பந்தை வீசினாலும் பந்து திரும்பவில்லை என்றால் அதில் பயனில்லை என இங்கிலாந்து சுழற்பந்து வீச்சாளர் ஸ்வான் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது: சுழற்பந்து வீச்சாளர்கள் பந்தைத்திருப்ப வேண்டியது அவசியமானதாகும். இல்லையென்றால் அவர்களை முதல்தர கிரிக்கெட் போட்டியில் இருந்து நீக்க வேண்டும். பந்தைத் திருப்ப முயலாமல் சுழற்பந்து வீசுவதில் எந்தவித பயனும் இல்லை. நான் சில இளம் சுழற்பந்து வீச்சாளர்களைப் பார்க்கிறேன். அவர்களிடம் நல்ல கட்டுப்பாடு உள்ளது. பந்தைத் துல்லியமாக வீசுகின்றனர். ஆனால் பந்தை திருப்புவதில் கவனம் செலுத்துவதில்லை.

வோர்னே, முரளிதரன் பந்து வீச்சை நான் அதிகம் பார்க்கிறேன். அவர்கள் பந்தைத் திருப்ப முயலாமல் இருந்ததில்லை. நான் அவர்கள் பாதையில் செல்ல விரும்புகிறேன். ஒரு அணியின் சிறந்த துடுப்பாட்ட வீரரின் விக்கெட்டை வீழ்த்துவதில் தான் எனக்கு திருப்தி அதிகம் உள்ளது. என்னுடைய வாழ்நாளில் டெண்டுல்கர் ஒரு சிறந்த துடுப்பாட்ட வீரர். அவருக்கு எதிராக வரும் தொடரில் பந்து வீசுவது சவாலானதாகும் எனத் தெரிவித்தார்.

# பல்வேறு சிக்கல்கள்



(கொச்சி)

இலங்கை கிரிக்கட் சபையில் பல்வேறு சிக்கல்கள் ஏற்பட்டுள்ளது என நட்சத்திர சுழற்பந்து வீச்சாளர் எம். முரளிதரன் தெரிவித்தார்.

டைம்ஸ் ஒப் இந்தியா இணையத்தளத்துக்கு வழங்கிய செவ்வி ஒன்றில் அவர் இதனைத் தெரிவித்தார். இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

இலங்கை கிரிக்கட் சபை, ஐ.பி.எல் போட்டிகளில் விளையாடுவதற்கான ஆட்சேபனை தெரிவிக்காத உடன்படிக்கையில் கைச்சாத்திட்டுள்ளது. இந்த உடன்படிக்கை எதிர்வரும் மே மாதம் 20ஆம் திகதி வரையில் செல்லுபடியாகும்.

ஆனால் இந்தியன் பிரிமியர் லீக் போட்டிகளில் விளையாடுகின்ற இலங்கை கிரிக்கட் அணியின் வீரர்களை மே மாதம் 5ஆம் திகதி இலங்கை திரும்ப வேண்டும் எனத் தற்போது அழைத்துள்ளது. இது குறித்த உடன்படிக்கையை மீறும் செயல்.

அவ்வாறு ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட உடன்படிக்கை மீறப்படுவது, சட்டவிரோதமானது. இதனைப் பார்க்கும் பொழுது இலங்கை கிரிக்கட் சபையில் பல்வேறு சிக்கல்கள் ஏற்பட்டுள்ளது போலத் தெரிகின்றது என்றார்.

# புத்தாண்டை முன்னிட்டு விளையாட்டுப் போட்டிகள்



(யாழ்ப்பாணம்)

புத்தாண்டை முன்னிட்டு தெல்லிப்பளை பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கும், பல்வேறு கழகங்களுக்கும் இடையிலான கரப்பந்தாட்ட மற்றும் உதைபந்தாட்டப் போட்டிகள் ஞாயிற்றுக் கிழமை மல்லாகம் மகாவித்தியாலய மைதானத்தில் நடைபெற்றது.

இந்தப் போட்டிகளில் முதலில் அளவெட்டி மத்திய அணியும் தெல்லிப்பளை பொலிஸ் அணியும் மோதின. இதில் அளவெட்டி மத்திய அணி வெற்றி பெற்றது.

அடுத்து காங்கேசன்துறை ஐக்கிய அணியும், விநாயகர் அணியும் மோதியது. காங்கேசன்துறை ஐக்கிய அணி அதில் வெற்றி பெற்றது.

பெண்களுக்கான கரப்பந்தாட்டப் போட்டியில் அளவெட்டி இளம் சுடர் அணியும், அருணாசல அணியும், காங்கேசன்துறை ஐக்கிய அணியும் மோதின.

இதில் முதலாம் இடத்தை காங்கேசன்துறை ஐக்கிய அணியும், இரண்டாம் இடத்தை அருணாசல அணியும், மூன்றாம் இடத்தை இளஞ்சுடர் அணியும் பெற்றுக்கொண்டன.

புத்தாண்டு தினத்தன்று நடைபெற்றமையால் இப்போட்டி நிகழ்வை பலர் கண்டுகளித்தனர்.

# வெற்றி பெற்றது எஸ்.எஸ்.சி. அணி

(யாழ்ப்பாணம்)

புத்தாண்டை முன்னிட்டு இணுவில் சிறுவர் கலாஜோதி விளையாட்டுக்கழகம் நடாத்திய கால்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் கொக்குவில் எஸ்.எஸ்.சி அணி வெற்றிபெற்று கிண்ணத்தைச் சுவீகரித்தது.

பதிவு செய்யப்படாத உள்ளூர் மட்ட அணிகளிடையே நடாத்தப்பட்ட இக்கால்பந்தாட்டப் போட்டித் தொடர் இணுவில் கலாஜோதி விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

14 அணிகள் பங்குபற்றிய இப்போட்டித் தொடரில் உரும்பிராய் சரஸ்வதி அணியை எதிர்கொண்டு ஆடிய எஸ்.எஸ்.சி. அணி வெற்றிக் கிண்ணத்தைத் தமதாக்கிக் கொண்டது. போட்டியின் சிறப்பாட்டக்காரராக ஞானரூபன் தெரிவானார்.


இப்போட்டி நிகழ்வில் பல துறைசார்ந்த அதிகாரிகள், விளையாட்டு ஆர்வலர்கள், பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (19)




# அணியை வலுவாக்கத் திட்டங்கள் தயார்

எதிர்வரும் ஆண்டுகளில் அணியை வலுவானதாக உருவாக்கிக் கொள்ளும் நோக்கில் பல திட்டங்களைத் தயாரித்துள்ளோம். அந்த இலக்கு நோக்கிய பயணத்தில் சிறப்பாகச் செயற்படுவோம் என அவுஸ்ரேலிய அணித் தலைவர் மைக்கல் கிளார்க் தெரிவித்தார். இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது: அணியின் வீரராகவும், தலைவராகவும் மரியாதை கிடைக்க வேண்டும் என்றால் ஆடுகளத்தில் சிறப்பாக செயற்படுவதுடன் வெற்றிகளையும் பெற வேண்டியது மிகவும் முக்கியமானதாகும் என்று நான் நினைக்கிறேன். பங்களாதேஷ் அணிக்கு எதிரான வெற்றி மகிழ்ச்சி அளிக்கிறது. அடுத்த 2 ஆண்டுகளில் என்ன சாதிக்க வேண்டும் என்பது குறித்து சில இலக்குகளை நாங்கள் நிர்ணயித்துள்ளோம். அதனை அடைய நாங்கள் முயற்சி செய்வோம் என்றார்.

# கங்குலிதான் சிறந்தவர்



(கொல்கத்தா)


இந்திய கிரிக்கெட் அணிக்கு இதுவரை தலைவர்களாக இருந்தவர்களில் சௌரவ் கங்குலிதான் சிறந்தவர் என்று முன்னாள் தலைவர் முகமது அசாருதீன் தெரிவித்தார்.

கொல்கத்தாவில் திங்கட் கிழமை நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும்போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது: இந்திய அணி இக்கட்டான சூழ்நிலையில் இருந்தபோது தலைவர் பொறுப்பேற்று அணியை மேம்படுத்தியவர் கங்குலி. அவரது தலைமையில் இந்திய அணி பல சிறப்பான வெற்றிகளைக் குவித்துள்ளது. எனவே அவர்தான் இந்திய கிரிக்கெட் அணித் தலைவர்களில் மிகச் சிறந்தவர். அணியை வலுப்படுத்த கங்குலி மேற்கொண்ட முயற்சிகளைத் தொடர்ந்து, அடுத்து வந்த டோனி வெற்றி பெற்று வருகிறார். கங்குலி முதலில் மேற்கொண்ட முயற்சிகள்தான் இப்போதைய வெற்றிகளுக்கும் காரணம்.

ஐ.பி.எல். போட்டிகளில் கங்குலியை எந்த அணியும் ஏலம் எடுக்க முன்வராதது குறித்த கேள்விக்கு நேரடியர்கப் பதிலளிக்க மறுத்த அசார், இது அந்த அணிகளின் நிர்வாகம் சம்பந்தப்பட்ட விடயமாகவே நான் கருதுகிறேன். சச்சின் ஓய்வு பெறுவது குறித்து நாம் பேசுவது தேவையற்றது. அவரால் எப்போது வரை விளையாட முடியும் என்பது சச்சினுக்கே தெரியும் என்றார்.

# மனிதர்கள் செல்ல முடியாத அளவிற்கு ஜப்பான் அணுமின் நிலையத்தில் கதிர்வீச்சு

## ரோபோக்கள் கண்டுபிடிப்பு



(டோக்கியோ)

ஜப்பானின் புகுஷிமா அணுமின் நிலையத்தில் சேதம் அடைந்த அணு உலைக் கட்டடங்களுக்குள் இரண்டு ரோபோக்கள் அனுப்பப்பட்டன. அதில், இரண்டு அணு உலைகளிலும், மனிதர்கள் உள்ளே செல்ல முடியாத அளவிற்கு கடுமையான கதிர்வீச்சு இருப்பது கண்டறியப்பட்டது. இதற்கிடையில், புதிய அணுமின் நிலையத் திட்டங்கள் நிறுத்தி வைக்கப்படுவதாக, பிரதமர் நவோட்டோ கான் அறிவித்துள்ளார்.

புகுஷிமா டாய் இச்சி அணு மின் நிலையத்தின் ஒன்று மற்றும் 3ஆம் உலைகளில், அதிகளவு கதிர்வீச்சு வெளியாகி வருவதாகத் தெரிவிக்கப்பட்டது. அதனால், மனிதர்களை உள்ளே அனுப்ப முடியவில்லை. அதற்குப் பதிலாக, நேற்று முன்தினம் இரண்டு ரோபோக்கள் அனுபபப்பட்டன. அவற்றில் இருந்து எடுக்கப் பட்ட பதிவுகளில் இருந்து, உள்ளே கதிர் வீசசு அதிகமாக இருப்பது கண்டறியப்பட்டது.

எனினும், நான்கு உலைகளையும் மீண்டும் செயற்பாட்டிற்குக் கொண்டு வரும் திட்டத்திற்கு இந்த அதிகளவு கதிர்வீச்சுத் தடையாக இருக்காது. நாளடைவில் கதிர்வீச்சின் அளவு குறைந்து விடும் என, டெப்கோ அதிகாரிகள் நம்பிக்கை தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில், நேற்றுமுன்தினம் நடந்த ஒரு கூட்டத்தில் பேசிய ஜப்பான் பிரதமர் நவோட்டோ கான், கதிர்வீச்சு பேரிடர் குறித்த முழு விவரங்கள் கிடைக்கும் வரையிலும், புதிய திட்டங்கள் முன்னெடுக்கப்படமாட்டாது. அதே போல, ஜப்பானின் அணுசக்திக் கொள்கையும் மறுபரிசீலனை செய்யப்படும் என்றார்.

# ஆலங்கட்டி மழையால் சீனாவில் 18 பேர் பலி

(பீஜிங்)

சீனாவின் தென் பகுதியில் நேற்று முன்தினம் பெய்த ஆலங்கட்டி மழை மற்றும் மேகவெடிப்பு, பயங்கரச் சூறாவளியில் சிக்கி 18 பேர் பலியாகினர்.

155 பேர் காயம் அடைந்தனர். சீனாவின் தென்பகுதியில் உள்ள குவாங்டாங் மாகாணத்தில், நேற்றுமுன்தினம் பயங்கரச் சூறாவளி வீசியது. அத்தோடு, ஆலங்கட்டி மழையும் பெய்தது. குவாங்ஷாவூ, போஷன், ஷாவோகிங் மற்றும் டொங்குவான் நகரங்கள் இதில் பெரும் பாதிப்படைந்தன. மணிக்கு 164 கி.மீ., வேகத்தில் வீசிய புயலால், 45 வீடுகள் இடிந்து விழுந்தன. ஆயிரத்து 87 ஹெக்டேயர் பரப்பளவு வயல்வெளிகளில் பயிர்கள் நாசம் அடைந்தன. 3,200 பேர் பாதிக்கப்பட்டனர். மீட்புப் பணிகள் முழுவீச்சில் முடுக்கிவிடப்பட்டுள்ளன.

புயல் மற்றும் மழையால், இப்பகுதியில், 66 கோடி ரூபாய் அளவுக்கு பொருளாதார இழப்பு ஏற்பட்டிருப்பதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# புதிய பிரதமர் வேண்டுமென ஜப்பான் மக்கள் தெரிவிப்பு



(டோக்கியோ)

ஜப்பானில் அண்மையில் நடத்தப் பட்ட ஆய்வில், பிரதமர் நவோட்டோ கானுக்கு பதில், வேறொருவர் பிரதமராக வேண்டும் என, பெரும்பான்மையான மக்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

ஜப்பானில் அண்மையில் ஏற்பட்ட நிலநடுக்கம், சுனாமி மற்றும் கதிர்வீச்சுப் பேரடர்களின் போது, பிரதமர் நவோட்டோ கான் விரைவாகவும், சரியாகவும் செயலபடவில்லை என்ற கருத்து மக்களிடையே ஏற்பட்டுள்ளது. அதற்கேற்ப, நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சியினர் அவரைக் கடுமையாக விமர்சித்து வருகின்றனர்.

ஜப்பானின் “நிக்கி” பத்திரிகை, இயற்கைப் பேரிடர்களை பிரதமர் கையாண்ட விதம் குறித்து சமீபத்தில் ஆய்வு ஒன்றை நடத்தியது. அதில், 70 சதவீதம் பேர் பிரதமரின் தலைமை பற்றி அவநம்பிக்கை தெரிவித்தனர். வேறொருவர் பிரதமராக வர வேண்டும். அவர் தலைமையில் நாடு மீண்டும் புனர்நிர்மாணப் பணிகளை மேற்கொள்ள வேண்டும் எனக் கூறினர். அதேபோல், கதிர்வீச்சுப் பேரிடருக்கு அரசு பொறுப்பேற்க முடியாது என்றும் தெரிவித்தனர். நில நடுக்கத்திற்கு முன் நாட்டின் சில பகுதிகளில் நடந்த உள்ளூராட்சித் தேர்தல்களில், கானின் ஜப்பான் ஜனநாயகக் கட்சி படுதோல்வியைத் தழுவியது என்பது குறிப்பிடத்தக்கது.

# உயிருக்கு அச்சுறுத்தல் இருந்தாலும் பாகிஸ்தானுக்கு மீண்டும் திரும்புவேன்

## முஷாரப் கூறுகிறார்



(இஸ்லாமாபாத்)

தலிபான்கள் மற்றும் பிற பயங்கரவாதிகளிடம் இருந்து என் உயிருக்கு அச்சுறுத்தல் இருந்தாலும், நான் நிச்சயம் பாகிஸ்தானுக்குத் திரும்புவேன், என, பாகிஸ்தான் முன்னாள் ஜனாதிபதி பர்வேஸ் முஷாரப் தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தானின் லாகூர் நகரில், முஷாரப்பின் அனைத்து பாகிஸ்தான் முஸ்லிம் லீக் கட்சி அலுவலகத்தில், வீடியோ மூலம் தன் தொண்டர்களிடம் முஷாரப் பேசியதாவது:

நான் பலமுறை கொலை முயற்சிகளுக்கு ஆளாகியிருக்கிறேன். எந்தச் சம்பவத்தையும் எதிர்கொள்ள நான் தயாராகவே உள்ளேன். யாராலும் எனக்கு எந்தத் தீங்கும் செய்ய முடியாது. கடவுளைத் தவிர நான் யாருக்கும் பயப்படவில்லை. நான் பாகிஸ்தானுக்கு வந்தால், என் உயிருக்கு தலிபான்கள் மற்றும் பிற பயங்கரவாதிகளால் ஆபத்து இருக்கத்தான் செய்கிறது. ஆனால், அதுபோன்ற பல தாக்குதல்களை நான் சந்தித்திருக்கிறேன். நிச்சயம் பாகிஸ்தான் திரும்புவேன். யாரும் என்னைத் தடுக்க முடியாது. என் நாட்டு மக்களுக்கு நான் ஏதாவது செய்தாக வேண்டும் என முடிவெடுத்திருக்கிறேன். இவ்வாறு முஷாரப் தெரிவித்தார்.

# பதவி விலகினார்

(தெஹ்ரான்)

ஈரானின் புலானய்வுத்துறை அமைச்சர் தனது பதவியிலிருந்து திடீரென விலகியுள்ளார். இது குறித்து ஈரான் குடியரசு செய்தி ஏஜென்சி வெளியிட்டுள்ள செய்தியில் கூறியிருப்பதாவது-

ஈரானின் ஜனாதிபதியாக முகமது அகமது நிஜாத் மீண்டும் கடந்த 2009ஆம் ஆண்டு தேர்வு செய்யப்பட்டார். பின்னர் அதிபரானதும் அந்நாட்டு தலைமை மதகுரு அயத்துல்லா கோமெய்னி ஆகியோரிடையே கடந்த சிலமாதங்களாக கருத்து வேறுபாடு நிலவுகிறது. மேலும் முக்கிய முடிவுகள் எடுப்பதில் நிஜாத் தன்னிச்சையாக எடுப்பதாகக் கூறப்படுகிறது. இந்நிலையில் அந்நாட்டு புலனாய்வுத் துறை அமைச்சராக இருந்த ஹீடார்மெஸலாகி என்பவர் நேற்றுமுன்தினம் தனது பதவியை திடீர் ராஜினாமா செய்தார். இதற்கு அதிபர் நிஜாத்துடன் எழுந்த கருத்துவேறுபாடே காரணம் எனக் கூறப்படுகிறது. நிஜாத்தின் வலதுகரமாக விளங்கிய ஹீடார்மெஸலாகி, கடந்த 2009ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் போது பல்வேறு முறைகேடுகள் நடந்ததாக எதிர்க்கட்சிகள் குற்றம் சாட்டி வந்தன. பலத்த சர்ச்சைகளுக்கிடையே நிஜாத்தை அதிபராகத் தேர்வு செய்ததில் இவர் முக்கிய பங்கு வகித்தார். தற்போது நிஜாத்துடன் நேரடியாக மோத விரும்பவில்லையாதால் பதவியை ராஜினாமா செய்துள்ளார். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது. நாட்டின் பாதுகாப்புத் தொடர்பான முக்கிய துறையான புலனாய்வுத்துறை அமைச்சர் விலகியிருப்பது ஈரான் அரசியலில் பரபரப்பினை ஏற்படுத்தியுள்ளது.

# ஒபாமாவை இழிவுபடுத்தும் வகையில் வெளியிடப்பட்டுள்ள குரங்குப் படம்

(வொஷிங்டன்)

அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா அமெரிக்கர் அல்ல. வெளிநாட்டைச் சேர்ந்தவர் என்ற சர்ச்சை அண்மையில் எழுந்தது. அதற்கு முற்றுப் புள்ளி வைக்கும் விதமாகத் தான் அமெரிக்காவில் பிறந்ததற்கான பிறப்புச் சான்றிதழை ஒபாமா வெளியிட்டார்.

தற்போது, அவரை இழிவுபடுத்தும் வகையில் இனவெ இ-மெயில் அனுப்பப்பட்டுள்ளது. அதாவது அவரது தாய், தந்தையை பெரிய மனித குரங்கு போன்றும், அவர்களுடன் குட்டி மனிதக் குரங்காக ஒபாமா இருப்பது போன்றும் படம் வரைந்து இ-மெயில் வெளியிடப் பட்டுள்ளது.

இதைக் கலிபோர்னியாவில் உள்ள டீ பார்ட்டி அமைப்பைச்சேர்ந்த மரில்யன் தேவன் போர்ட் என்ற பெண் அனுப்பியுள்ளார். இவர் ஆரிஞ்ச் மாகாண குடியரசுக் கட்சியின் உறுப்பினராக உள்ளார். படத்துடன் அனுப்பியுள்ள இ-மெயிலில், அவர் யார்? என்று தெரியவில்லை.

ஏனெனில் அவரிடம் பிறப்பு சான்றிதழ் இல்லை என்று குறிப்பிட்டுள்ளார்.



அவரது இந்த இ-மெயிலுக்கு அமெரிக்காவில் கடும் கண்ட னம் எழுந்துள ளது. ஒபாமா குறித்து அவர் அனுப்பிய இந்த இ-மெயில் இனவெறியைத் தூண்டுகிறது.

அவரது இந்த மட்டமான ரசனை வெறுக்கத்தக்க வகையில் உளளது என அவரது கடசியின் ஆரிஞ்ச் மாகாண தலைவர ஸ்காட்பாக் தெரி வித்து ள்ளார். மேலும், அவர் தனது கட்சி யில் இருந்து பதவியை ராஜினாமாச் செய்துவிட்டு வெளியேற வேண்டும் எனக் கூறியுள்ளார்.

இது போன்று அவரது கட்சியினர் பலரும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர். ஆனால் பதவி விலக தேவன் போர்ட் மறுத்துள்ளார். நான் இனவெறியைத் தூண்டுவதற்காக இது போன்று இ-மெயில் அனுப்பவில்லை. ஒபாமாவை கேலி (ஜோக்) செய்யவே இது போன்று செய்தேன்.

எனது நடவடிக்கையில் யாருக்கேனும் மனவருத்தம் ஏற்பட்டால் அதற்காக நான் மன்னிப்புக் கேட்டுக் கொள்கிறேன் என்று கூறியுள்ளார்.

# ஸ்பெக்ட்ரம் வழக்கிற்குத் தேவையான இரண்டு முக்கிய ஆவணங்கள் மாயம்

## அதிர்ச்சியில் சி.பி.ஐ. அதிகாரிகள்

(புதுடெல்லி)

ஸ்பெக்ட்ரம் குறித்த வழக்கில் இரண்டு முக்கிய ஆவணங்கள் காணாமற்போயுள்ளமை தொடர்பாக தீவிர விசாரணை நடத்தப்பட்டு வருகின்றது.

2ஜி ஸ்பெக்ட்ரம் விவகாரத்தில் கடந்த 2 ஆம் திகதி, முதல் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது. அடுத்து மேலும் ஒரு குற்றப்பத்திரிகையை வரும் 25 ஆம் திகதி தாக்கல் செய்ய சி.பி.ஐ திட்டமிட்டுள்ளது. இரண்டாவது குற்றப்பத்திரிகை தயாரிப்புப் பணியில் ஈடுபட்டுள்ள சி.பி.ஐ அதிகாரிகள், குற்றத்தை உறுதி செய்வதற்கான ஆவணங்களையும் தொகுதித்து வருகிறார்கள்.

இந்த நிலையில் 2 முக்கிய ஆவணங்கள் காணாமல் போய் இருப்பது சி.பி.ஐ மூத்த அதிகாரிகளிடம் கடும் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது. அதில் ஒரு ஆவணம், ஆ.ராசா மந்திரியாக இருந்த போது தொலைத்தொடர்பு துறை அலுவலகத்தில் பதிவான தினசரி அலுவலக பணி ஆவணமாகும்.


இந்த ஆவணத்தில் தான் ஸ்பெக்ட்ரம் அலைவரிசை ஒதுக்கீடு தகவல்கள் இருந்தது குறிப்பிடத்தக்கது. மற்றொரு ஆவணம், தனியார் தொலைத்தொடர்பு நிறுவனம் ஒன்று ஸ்பெக்ட்ரம் உரிமம் கோரி அரசுக்கு விண்ணப்பித்த ஆவணமாகும்.

இந்த இரண்டு ஆவணங்களையும் கண்டுபிடிக்கும் பணியில் சி.பி.ஐ அதிகாரிகள் ஈடுபட்டுள்ளனர். ஆனால் அந்த 2 ஆவணங்கள் இதுவரை சிக்கவில்லை. ஸ்பெக்ட்ம் விவகாரத்தில் நடந்த தொடர் சம்பவங்களை உறுதிப்படுத்த இந்த 2 ஆவணங்களும் அவசியம் தேவை. இந்த ஆவணங்களுடன் தொடர்புடைய வேறு சில ஆவணங்களே கிடைத்துள்ளன. எனவே ஒரிஜினல் ஆவணங்களைத் தேடும் பணி முடுக்கி விடப்பட்டுள்ளது. இதற்கிடையே தொலைத் தொடர்பு துறை அதிகாரிகளிடம் சி.பி.ஐ வாக்குமூலம் கேட்டு பதிவுசெய்து வருகிறது.

மாயமாகிவிட்ட முக்கிய ஆவணங்களுக்கு பதிலாக இந்த வாக்குமூலத்தை சி.பி.ஐ பயன்படுத்த திட்டமிட்டுள்ளதாகக் கூறப்படுகிறது. இதற்கிடையே ஸ்பெகட்ரம் விவகாரத்தில் சி.பி.ஐ நடத்தி வரும் விசாரணைகளுக்கு எல்லாவிதத்திலும் உதவிகள், சட்ட ஆலோசனைகள் வழங்க தயாராக இருப்பதாக ஜனதாக் கட்சி தலைவர் சுப்பிரமணிய சுவாமி கூறியுள்ளார. சிறப்பு நீதிமன்ற நீதிபதி சைனி முன்பு ஆஜராகி அவர் தன் விருப்பத்தை வெளியிட்டார். சுவாமி உதவி வேண்டுமா என்பது குறித்து பதில் அளிக்க சி.பி.ஐக்கு நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.




# இனந்தெரியாதவர்களின் கல்வீச்சால் விஜய் வீட்டுக் கண்ணாடிகள் உடைவு



(சென்னை)

சாலிக்கிராமத்திலுள்ள நடிகர் விஜயின் வீட்டின்மீது இனந்தெரியாதவர்கள் நடத்திய கல்வீச்சுத் தாக்குதலில் வீட்டின் கண்ணாடிகள் உடைந்து நொருங்கின.

கல்வீச்சுத் தாக்குதல் நடத்தப்பட்டவேளை விஜய் வீட்டில் இல்லை. அவர் கொட்டிவாக்கத்தில் உள்ள வீட்டிலிருந்தார். கல்வீசியவர்கள் அங்கிருந்து தப்பி ஓடிவிட்டனர். இது குறித்து வஜய் அன்ரனி விருகம்பாக்கம் பொலிஸில் புகார் அளித்தார். பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர். விஜய் தொடங்கிய மக்கள் இயக்கம், தமிழக சட்டமன்றத் தேர்தலில் அ.தி. மு.க. வுக்கு ஆதரவு அளித்தது. எஸ்.ஏ. சந்திரசேகரன் தமிழ்நாடு முழுவதும் அ.தி.மு.க. வேட்பாளர்களை ஆதரித்து பிரசாரம் செய்தார்.

அரசியல் காரணமாக இது நடந்ததா? அல்லது குடிபோதையில் யாரேனும் கல்வீசினார்களா? என்று பொலிஸார் விசாரித்து வருகின்றனர்.

# கவலைக்கிடமாக உள்ள சாயிபாபாவின் உடல்நிலை

(புட்டபர்த்தி)


பல்வேறு உடல்நலக் கோளாறுகள் காரணமாக சிகிச்சை பெற்றுவரும் சத்ய சாயிபாபாவின் உடல்நிலை தொடர்ந்து கவலைக்கிடமாக இருந்துவருவதாக அவருக்கு சிகிச்சை அளித்து வரும் வைத்தியர்கள் தெரிவித்தனர்.

அவரது கல்லீரல் உள்ளிட்ட முக்கிய உயிர்நாடி அமைப்புகள் வைத்தியர்களின் சிகிச்சைக்கு குறைந்த அளவு பலன் இருப்பதையே காட்டுகிறது. இது மருத்துவர்களுக்கு கவலையை ஏற்படுத்தி யுள்ளதாக சத்ய சாயிமருத்துவ அறிவியல் நிறுவனம் நேற்றுக் காலை வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது. சாயிபாபாவுக்கு கருவி மூலம் தொடர்ந்து செயற்கை சுவாசம் அளிக்கப்பட்டு வருகிறது. அவரது ரத்த அழுத்தத்தில் ஏற்ற இறக்கம் காணப்படுகிறது. அது உரிய மருந்துகள் மூலம் சரிசெய்யப்பட்டு வருகிறது என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே சாயிபாபா அறக்கட்டளை நிதிகள் அனுமதி பெறாமல் செலவு செய்யப்படுவதாகவும், வேறு பணிகளுக்கு திருப்பி விடப்படுவதாகவும் ஊடகங்களில் வெளியான செய்திகளை சத்ய சாயிபாபா மத்திய அறக்கட்டளை மறுத்துள்ளது.

அறக்கட்டளையின் அனைத்துப் பணிகளுக்கும் அதன் நிறுவனரான சாயிபாபா ஒப்புதல் அளித்துள்ளார். ஒப்புதல் வழங்கப்பட்ட பணிகளுக்கு நிதி வழங்குவதற்கான காசோலைகளில் கையெழுத்திடும் அதிகாரம் சாயிபாபாவுக்கு மட்டுமே உள்ளது என சாயிபாபா அறக்கட்டளை வெளியிட்ட அறக்கட்டளையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# 3 ரொக்கட்டுக்கள் இணைந்த பி.எஸ்.எல்.வி.சி இன்று காலை விண்ணுக்கு அனுப்பப்படுகிறது



(சிறீஹரிகோட்டா)

இந்திய விண்வெளி ஆராய்ச்சித்துறை விஞ்ஞானிகள் கடந்த டிசம்பர் மாதம் 25 ஆம் திகதி ஜி.எஸ்.எல்.வி.சி ரொக்கெட்டை விணணில் ஏவினார்கள். ஆனால் அந்த ரொக்கெட் தொழில்நுட்பக் கோளாறினால் நடுவானில் வெடித்துச் சிதறி விட்டது.

இதையடுத்து உடனடியாக அடுத்த ராக்கெட்டை விண்ணில் ஏவும் முயற்சியில் ஈடுபட்டனர். இதற்காக பி.எஸ்.எல்.வி.-சி 16 என்ற ரொக்கெட் தயாரிக்கப்பட்டது. இதன் பணிகள் விரைவாக முடிக்கப்பட்டு ஏவுவதற்கு தயார் படுத்தப்பட்டன.

இந்த ரொக்கெட் இன்று (புதன்கிழமை) காலை 10 மணி 12 நிமிடத்தில் விண்ணில் ஏவப்படுகிறது. இதில் இந்தியாவுக்குச் சொந்தமான ரிசோர்ஸ் சார்ட்-2 என்ற 1206 கிலோ செயற்கைக் கோள் விண்ணுக்கு அனுப்பப்படுகிறது.


இத்துடன் இந்தியா- ரஷ்யா கூட்டு தயாரிப்பான யூத சாட் செயற்கைகோள், சிங்கப்பூரைச் சேர்ந்த நனியாங் பல்கலைக்கழகம் தயாரித்துள்ள எக்ஸ் சாட் செயற்கைகோள் ஆகியவையும் ரொக்கெட்டில் வைத்து ஏவப்படுகின்றன.

யூத் சாட் செயற்கைகோள் 98 கிலோ எடையும், எக்ஸ் சாட் செயற்கைகோள் 106 கிலோ எடையும் கொண்டது. 3 செயற்கைக் கோள்களுமே இயற்கை வளம், மற்றும் பருவ நிலை ஆராய்ச்சிக்கு பயன் படுத்தப்படவுள்ளன.

ரொக்கெட்டைச் செலுதது வதற்கான கவுண்ட்டவுன் இன்று அதிகாலை 4 மணி 12 நிமிடத்தில் தொடங்கியது. 20ஆம் திகதி காலை 10.12 மணி ஆனதும் ரொக்கெட்டில் தானாக தீப்பிடித்து உந்து சக்தி ஏற்பட்டு விண்ணில் பாயும்.

பின்னர் தரைகட்டுப்பாட்டு தளத்திலிருந்து ரொக்கெட்டை இயக்கி உரிய சுற்று வட்டப் பாதை வந்ததும் ஒவ்வொரு செயற்கை கோளாக விண்ணில் நிலை நிறுத்தப்படும்.

# அமெரிக்க வாழ் இந்தியருக்கு புலிட்சர் விருதுகிடைத்துள்ளது





(பாஸ்டன்)

அமெரிக்க வாழ் இந்திய ரான சித்தார்த் முகர்ஜியின் புத்தகத்துக்கு 2011 ஆம் ஆண்டுக்கான புலிட்சர் விருது கிடைத்துள்ளது.

சித்தார்த் முகர்ஜியின் புற்று நோய் தொடர்பான The Emperor of All Maladies: A Biography of Cancer என்ற புத்த கத்துக்கு நாவல் அல்லாத பிரி வில் புலிட்சர் விருது கிடைத் துள்ளது.

இந்த விருது 10 ஆயிரம் டாலர் பரிசுப் பணத்தை உடையது. இந்தியாவில் பிறந்த முகர்ஜி கொலம்பியா பல்கலைக்கழகத்தில் மருந்தியல் உதவிப் பேராசிரியராகப் பணிபுரிகிறார். இவர் ஸ்டேன்்.போர்ட் பல்கலைக்கழகம், ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகம், ஹவார்ட் மருத்துவப் பள்ளி யல் பட்டப்படிப்புப் படித்துள்ளார். நேச்சர், த நியு இங்கிலாந்து ஜர்னல் ஆ்.ப் மெடிசின், த நியூயார்க் டைம்ஸ் மற்றும் த நியு ரிபப்ளிக் பத்திரிகைகளில் இவர் எழுதிய கட்டுரைகள் வெளியாகியுள்ளது குறிப்பிடத்தக்கது.

# மும்பைக் கடற்பகுதியில் மர்மக் கப்பல் கடற்படையினர் தீவிர தேடுதல் வேட்டை



(மும்பை)

மும்பை கடல் பகுதியில் பயங்கர ஆயுதங்கள், வெடி பொருட்களுடன் ஒரு கப்பல் ஊடுருவி வருவதாக உளவுத் துறைக்கு ரகசிய தகவல் கிடைத்தது.

இதையடுத்து மும்பை கடலோர காவல் படையினர் உஷார்படுத்தப்பட்டனர். தீவிரவாதிகள் ஊடுருவி பெரிய அளவில் தாக்குதல் நடத்தி விடக்கூடாது என்ற முன் எச்சரிக்கையுடன் நேற்று மும்பை கடல் பகுதியில் தீவிர தேடுதல்வேட்டை நடத்தப்பட்டது.

மத்திய உளவுத்துறை, தீவிரவாத எதிர்ப்புப்படை, அதிரடிப்படை, கடலோர காவற் படை, கடற்படை, மும்பை பொலிஸார் ஒருங்கிணைந்து இந்த அதிரடி வேட்டையை நடத்தினார்கள்.

அப்போது மும்பை கடல் பகுதியில் சந்தேகப்படும்படி சென்று கொண்டிருந்த டென்மார்க் கப்பல் ஒன்றைப் பார்த்தனர். அந்தக் கப்பலை பாதுகாப்புப் படையினர் மடக்கிப் பிடித்தனர். டெனீசியா சன்ரைஸ் எனற பெயருடன் வந்திருந்த கப்பலில் 8 பேர் இருந்தனர். அவர்களிடம் விசாரணை நடத்திய போது, அவர்கள் தாங்கள் வியாபாரிகள் என்று தெரிவித்தனர்.

இதையடுத்து கப்பலில் சோதனை நடத்தப்பட்டது. ஆனால் கப்பலுக்குள் எந்த ஆயுதமும் இல்லை என்றாலும் பாதுகாப்புப் படையினர் மும்பை துறைமுகத்துக்கு கொண்டு வந்து மேலும் விசாரித்து வருகிறார்கள்.

மும்பை கடல் பகுதியில் ஊடுருவ தீவிரவாதகள் கப்பலில் வருவதாக உளவுத் துறையினர் கூறினாலும், அந்தக் கப்பல் கடலில் எந்தப் பகுதியில் வருகிறது என்ற தகவலை வெளியிடவில்லை. இதனால் மும்பை கடல் பகுதியில் கடலோர காவல் படையினர் ரோந்து பணியை தீவிரப்படுத்தி உள்ளனர். மும்பை கடல் பகுதியில் கண்காணிப்பில் ஈடுபட கடற்படை சார்பில் கூடுதல் கப்பல்கள் அனுப்பப்பட்டுள்ளன.

# எல்லை நிர்ணய மீள்நடவடிக்கையில் சிறுபான்மை பிரதிநிதிகளும் வேண்டும்

## பவ்ரல் அமைப்பு கோரிக்கை

PAFFREL

(கொழும்பு)

எல்லை நிர்ணய குழுவில் சிறுபான்மை மக்கள் பிரதிநிதிகளும் உள்ளடக்கப்பட வேண்டுமென இலங்கையின் முன்னணி தேர்தல் கண்காணிப்பு அமைப்பான பவ்ரல் கோரிக்கை விடுத்துள்ளது.

வடக்கு கிழக்கு எல்லை மீள் நிர்ணய நடவடிக்கைகளின் போது தமிழ் மற்றும் முஸ்லிம் பிரதிநிதிகளின் பெயர்கள் உள்ளடக்கப்பட வேண்டியது அவசியமானது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

புதிதாக அறிமுகப்படுத்தப்பட உள்ள உள்ளூராட்சி மன்ற திருத்தச் சட்டத்தின் பிரகாரம் தேர்தல் தொகுதிகளின் எல்லைகள் மீள் நிர்ணயம் செய்யப்படவுள்ளது. அரசாங்கத்தினால் நியமிக்கப்பட்ட பிரதிநிதிகள் தொகுதி எல்லைகளின் மீள் நிர்ணயப் பணிகளை மேற்கொண்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# புலி அனுதாபிகளுக்கு எதிராக அனைவரும் அணிதிரள வேண்டும்

## அமைச்சர் மைத்திரிபால



(கொழும்பு)

புலி அனுதாபிகளுக்கு எதிராக நாட்டு மக்கள் அனைவரும் அணி திரள வேண்டுமென சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

பயங்கரவாத அனுதாபிகளுக்கு ஆதரவளிக்கும் உள்நாட்டு வெளிநாட்டு சக்திகளை முறியடிப்பதற்கு அனைவரும் ஒன்றிணைய வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார்.

பயங்கரவாதிகளுக்கு எதிராக யுத்தம் செய்த ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவையும், இராணுவப் படையினரையும் யுத்தக் குற்றச் செயல்களில் ஈடுபட்டதாக குற்றம் சுமத்துவதற்கு முனைப்புக் காட்டப்பட்டு வருவதாகக் குறிப்பிட்டுள்ளார். ஐக்கிய நாடுகளின் நிபுணர் குழு அறிக்கையை அரசாங்கம் முற்று முழுதாக நிராகரிக்கின்றது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

## எட்டு சந்தேகநபர்கள் கைது

(மன்னார்)

மன்னார் பிரதேச செயலாளர் திருமதி ஸ்ரான்லி டி மெல் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக இதுவரை 8 பேர் சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டுள்ளதாக மன்னார் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் கொடிதுவக்கு தெரிவித்தார்.

சம்பவம் இடம்பெற்ற கடந்த புதன்கிழமை ஒரு சந்தேகநபரும், மறுநாள் வியாழக்கிழமை 3 சந்தேகநபர்களும் கைது செய்யப்பட்டதுடன் தலைமறைவாகியிருந்த 4 சந்தேகநபர்கள் நேற்று முன்தினம் திங்கட்கிழமையும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தற்போது மன்னார் பொலிஸ் நிலையத்தில் தடுத்துவைக்கப்பட்டுள்ள இவர்கள் விசாரணைகளையடுத்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படுவார்கள் என மன்னார் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் கொடிதுவக்கு குறிப்பிட்டார்.

# ஐ.நா.விடமிருந்து இலங்கையைப் பாதுகாக்க ரஷ்யாவும், சீனாவும் முன்வரவேண்டும்

## தேசிய சுதந்திர முன்னணி அழைப்பு

(கொழும்பு)

இலங்கைக்கு எதிரான ஐ.நாவின் நடவடிக்கைகளைத் தடுத்து நிறுத்த ரஷ்யாவும், சீனாவும் முன்வர வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்துள்ளது விமல் வீரவன்சவின் தேசிய சுதந்திர முன்னணி.

தேசிய சுதந்திர முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் பியசிறி விஜேநாயக்க கொழும்பில் நடத்திய ஊடக சந்திப்பிலேயே இந்த அழைப்பை விடுத்துள்ளார்.

ஐ.நா நிபுணர்கள் குழுவின் அறிக்கையில் இருந்து இலங்கையைப் பாதுகாக்க ரஷ்யாவும் சீனாவும் உதவவேண்டும் என்று அழைப்பு விடுக்கிறோம்.



ஐ.நாவில் ஆதிக்கம் செலுத்தும் அமெரிக்கா, பிரான்ஸ், பிரித்தானியா ஆகியவற்றை முறியடிக்க ரஷ்யாவும் சீனாவும் முன்வர வேண்டும்.

உலக அமைதியை நிலைநாட்ட ஐ.நா அமைப்பு தவறி விட்டது. எனவே ரஷ்யாவும் சீனாவும் புதிய உலக ஒழுங்கை உருவாக்க முன்வர வேண்டும்.

ஐ.நா பொதுச்செயலர் பான் கீ மூன் அமெரிக்காவின் கைப்பொம்மையாக உள்ளார்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவையும் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷவையும் அனைத்துலக குற்றவியல் நீதிமன்றத்தில் நிறுத்தும் முயற்சிகளுக்கு பான் கீ மூன் பயன்படுத்தப்பட்டுள்ளார்.

அவர்கள் அதைச் செய்வதற்கு நாம் அனுமதிக்கப் போவதில்லை.

அனைத்துலக குற்றவியல் நீதிமன்றத்தில் எமது போர் வீரர்களை நிறுத்துவதற்கு எடுக்கப்படும் எந்தவொரு முயற்சிகளுக்கு எதிராகவும் நாம் போராட்டங்களை நடத்துவோம்.

எமது சடலங்களின் மீது தான் அவர்களால் அதைச் செய்ய முடியும்.

நிபுணர்கள் குழுவை பான் கீ மூன் தனக்கு ஆலோசனை கூறுவதற்குத் தான் அமைத்தார். ஆனால் பான் கீ மூன் அதை ஐ.நாவின் அறிக்கையாக வெளியிட்டுள்ளார்.

190 இற்கும் அதிகமான நாடுகள் அங்கம் வகிக்கும் ஐ.நா பொதுச்சபையில் தீர்மானம் நிறைவேற்றப் படாமல் எந்தவொரு குழுவையும் அமைக்கவோ அல்லது பாதுகாப்புச் சபையின் அனுமதி பெறப்படாமல் எந்தவொரு நாட்டின் மீதும் போர்க்குற்றங்கள் தொடர்பான விசாரணை செய்யப்படவோ முடியாது என்றும் அவர் மேலும் கூறியுள்ளார்.

# இலங்கைக்கு வழங்கும் உதவித்தொகையை அடுத்தவருடம் இரட்டிப்பாக்குகிறது உலக வங்கி




(கொழும்பு)

இலங்கைக்கு வழங்கி வரும் உதவித் தொகையை அடுத்த வருடம் இரட்டிப்பாக்குவதற்கு உலக வங்கி முன்வந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. சர்வதேச நிதி ஒத்துழைப்பு சிரேஷ்ட அமைச்சர் சரத் அமுனுகம, உலக வங்கியின் முகாமைத்துவப் பணிப்பாளர் கலாநிதி ஒக்கொன்ஜோ இவெலாவை வொஷிங்டனில் சந்தித்த போதே இது தொடர்பாகக் கலந்துரையாடப்பட்டுள்ளது. இலங்கையின் அபிவிருத்திப் பணிகளுக்கு உலக வங்கி தொடர்ச்சியாக வழங்கிவரும் ஆதரவுக்கு நன்றி தெரிவித்த அமைச்சர், உலக வங்கியின் ஆதரவுடன் முன்னெடுக்கப்பட்டுவரும் அபிவிருத்திப் பணிகள் தொடர்பில் கலந்துரையாடியுள்ளார். பொருளாதார ரீதியில் நாடு முன்னேறிச் செல்வதற்கான திட்டங்களுக்கு உலக வங்கி தொடர்ந்தும் உதவிகளை வழங்கும் எனக் குறிப்பிட்ட ஒக்கொன்ஜோ, உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு முதலீடுகளை அதிகரிப்பதன் மூலம் நாட்டின் தலா வருமானத்தை அதிகரிக்கும் இலங்கை அரசாங்கத்தின் எதிர்காலத் திட்டத்துக்கு உலக வங்கி ஒத்துழைப்பு வழங்கும் என்றும் அமைச்சர் சரத் அமுனுகமவிடம் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் தற்பொழுது முன்னெடுக்கப் பட்டிருக்கும் அபிவிருத்திப் பணிகளைப் பாராட்டியிருக்கும் உலக வங்கியின் முகாமைத்துவப் பணிப்பாளர் ஒக்கொன்ஜோ இவெலா, அபிவிருத்திகள் மற்றும் திறன் களை இலங்கை ஏனைய தெற்காசிய நாடுகளுடன் பகிர்ந்துகொள்ள வேண்டும் என்பதையே உலக வங்கி எதிர்பார்ப்பதாகவும் அமைச்சர் சரத் அமுனுகமவிடம் தெரிவித்துள்ளார்.

சர்வதேச நிதி ஒத்துழைப்பு சிரேஷ்ட அமைச்சர் சரத் அமுனுகமவுடன், அமெரிக்காவுக்கான இலங்கைத் தூதுவர் ஜாலிய விக்ரமசூரிய, மத்திய வங்கியின் பிரதி ஆளுநர் டி.டி.தீரசிங்க, சர்வதேச நாணய நிதியத்தின் பதில் நிறைவேற்றுப் பணிப்பாளர் கலாநிதி பீ.என்.வீரசிங்க ஆகியோரும் இச்சந்திப்பில் கலந்து கொண்டனர்.

# கலாசார நிகழ்வில் கலந்துகொள்ள முல்லைத்தீவிற்கு வருகின்றார் நாமல்



(கொழும்பு)

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் புதல்வரும் நாடாளுமன்ற உறுப்பினருமான நாமல் ர்ராஜபக்ஷ எதிர்வரும் 23ஆம் திகதி முல்லைத்தீவு மாவட்டத்திற்கான விஜயமொன்றை மேற்கொள்ளவுள்ளார்.

தமிழ், சிங்கள புத்தாண்டையொட்டி முல்லைத்தீவு மாவட்டத்தில் கலாசார போட்டி மற்றும் மாபெரும் இசை நிகழ்ச்சி நடைபெறவுள்ளது. இவற்றில் கலந்துகொள்ளும் முகமாகவே நாமல் ராஜபக்ஷ முல்லைத்தீவு மாவட்டத்திற்கான விஜயத்தை மேற்கொள்ளவுள்ளதாக மாவட்ட அரசாங்க அதிபர் ஏ.பத்திநாதன் தெரிவித்தார்.

நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷவின் ஏற்பாட்டில் நடைபெறவுள்ள மேற்படி நிகழ்வுகள், 23ஆம் திகதி காலை 7.30 மணி முதல் மதியம் 1.30 வரையும் இரவு 7.00 மணி முதல் நள்ளிரவு 12.00 மணி வரையும் நடைபெறவுள்ளதாகவும் அவர் கூறினார்.

இதேவேளை, முறிகண்டி இந்து மகாவித்தியாலயத்தின் மாடிக்கட்டடத்திற்கான அடிக்கல்லையும் 22ஆம் திகதி நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ நாட்டி வைக்கவுள்ளார். இதில் மீள்குடியேற்ற அமைச்சர் குணரத்ன வீரக்கோன் கலந்துகொள்ளவுள்ளதாகவும் முல்லைத்தீவு அரசாங்க அதிபர் தெரிவித்தார்.

இப்பாடசாலையின் புனரமைப்புப் பணிகளுக்காக 10 மில்லியன் ரூபாவை மீள்குடியேற்ற அமைச்சு ஒதுக்கீடு செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## கடற்தொழிலுக்குச் சென்ற இருவர்

# மூன்று நாட்களாகியும் கரைதிரும்பவில்லை

(வல்வெட்டித்துறை)
வல்வெட்டித்துறை ஆதி கோவிலடி கடற்பரப்பில் இருந்து நேற்றுமுன்தினம் பிற்பகல் 2.30 மணிக்கு கடற்தொழிலுக்குச் சென்ற இரு சகோதரர்கள் நேற்றுவரை கரை திரும்ப வில்லை என அவர்களின் உறவினர்கள் வல்வெட்டித்துறை பொலிஸில் புகார் செய்துள்ளனர்.

பாபு பிரபாகரன் (வயது - 26), பாபு சசிகரன் (வயது - 27) ஆகிய இருவருமே கரை திரும்பாதவர்களாவர்.

இவர்களைத் தேடும் பணியில் ஆதிகோவிலடி கடற்தொழிலாளர் சுட்டுறவுச் சங்கம் 5 படகுகளை அனுப்பிவைத்துள்ளதாகவும், பருத்தித்துறை கடற்படையினரும் தேடுதலில் ஈடுபட்டுள்ளதாகவும் சக கடற்தொழிலாளர்கள் தெரிவித்துள்ளனர். இது சம்பந்தமாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் கவனத்திற்குக் கொண்டு வந்ததை அடுத்து அவர் கடற்படையினருடன் தொடர்பு கொண்டு உரிய நடவடிக்கை எடுத்துள்ளார் என தெரிவிக்கப்படுகின்றது.



# சிகிச்சை பலனின்றி மரணம்

(யாழ்ப்பாணம்)
கழுத்தில் சுருக்கிட்டுச் சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட ஒருவர் சிகிச்சை பலனின்றி நேற்றுக்காலை இறந்துள்ளார்.

கழுத்தில் சுருக்கிட்ட நிலையில் நேற்று முன்தினம் இரவு சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட கொன்வன்ற் (convent) வீதியைச் சேர்ந்த கிருஷ்ண மூர்த்தி றொபின்சன் (வயது 23) என்பவரே சிகிச்சை பயனின்றி நேற்றுக்காலை இறந்தவராவார். இவரது மரணம் தொடர்பாக பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# கிளிநொச்சி அறிவியல்நகர் வீடமைப்புத் திட்டம் ஆரம்பம்

மகிந்த சிந்தனையின் கீழ் பத்து இலட்சம் தேசிய வீடமைப்பு மற்றும் குடியிருப்பு அபிவிருத்தி நடவடிக்கையின் கீழ் நிர்மாணிக்கப்பட்ட "கிளிநொச்சி அறிவியல்நகர் வீடமைப்புத்திட்டம்" திறப்புவிழா எதிர்வரும் 22ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு வைபவ ரீதியாக திறந்துவைக்கப்படவுள்ளது.

இவ் வீட்டுத்திட்டத்தினை நிர்மாணத்துறை, பொறியியல் சேவைகள் வீடமைப்பு மற்றும் பொது வசதிகள் அமைச்சர் கௌரவ விமல் வீரவங்ஸ அவர்கள் சம்பிரதாய பூர்வமாகத் திறந்துவைக்கவுள்ளார்.

இந் நிகழ்வில் பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுகைத்தொழில் அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, அம்பாந்தோட்டை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ, யாழ்ப்பாண மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமார், நிர்மாணத்துறை, பொறியியல் சேவைகள் வீடமைப்பு பொது வசதிகள் அபிவிருத்தி அமைச்சர் லசந்த அழகியவண்ண ஆகியோர் கலந்துகொள்கின்றனர்.

மேற்படி நிகழ்வு தேசிய வீடமைப்பு அதிகாரசபைத் தலைவர் ஜயந்த சமரவீர தலைமையில் நடைபெறவுள்ளது.


# மக்களுக்குப் பயன்படாத நகரசபையில் உறுப்பினராக இருப்பதில் அர்த்தமில்லை

## முன்னாள் நகரசபைத் தலைவர்

கடந்த ஒன்றரை வருடங்களாக மக்களுக்கு எந்த விதத்திலும் பயன்படாதுள்ள வவுனியா நகரசபையில் ஓர் உறுப்பினராக தொடர்ந்தும் இருப்பதில் எந்தவித அர்த்தமும் இல்லை என்பதனை கருத்திற்கொண்டு நகரசபை உறுப்பினர் பதவியிலிருந்து இராஜினாமா செய்து கொள்கிறேன் என ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணியின் (புளொட்) மத்திய குழு உறுப்பினரும், முன்னாள் வவுனியா நகரசபைத் தலைவருமான ஜி.ரி.லிங்கநாதன் தெரிவித்துள்ளார்.

வவுனியா தமிழ் தெற்கு பிரதேசசபைக்கு தெரிவுசெய்யப்பட்ட உறுப்பினர்களின் பதவியேற்பு நிகழ்வு நெளுக்குளம் பிரதேசசபை அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது இதில் சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

பல்வேறு இடையூறுகளுக்கு மத்தியில் தமது தேவைகளை நிறைவு செய்துகொள்வதற்கென மக்கள் வாக்களித்து உறுப்பினர்களை தெரிவு செய்துள்ளனர். அவர்கள் மக்களின் தேவையை உணர்ந்து செயற்பட வேண்டும். அந்த வகையில் வவுனியா நகரசபை கடந்த ஒன்றரை வருடங்களாக செயற்படாது போய்விட்டது. மக்களின் கோரிக்கைகளை நிறைவேற்ற நகரசபை தவறிவிட்டது. இதனால் மக்களின் கோபத்திற்கு உறுப்பினராக இருக்கும் நாமும் காரணமாகிவிட முடியாது என்பதனைக் கருத்திற்கொண்டும், நகரசபை ஆளும் நிர்வாகம் ஏற்றுக்கொள்ள வேண்டிய பொறுப்பில் நாமும் வீணாக சம்பந்தப்பட்டுள்ளமையாலும் மக்களுக்கு பயன்படாத நகரசபையில் இருந்து இராஜினாமா செய்துகொள்கிறேன் என்று தெரிவித்துள்ளார்.



# வடிசாராயம் விற்றவர்களுக்கு 4ஆயிரத்து 500 ரூபா அபராதம்

(சாவகச்சேரி)
சாவகச்சேரி பகுதியில் அனுமதிப்பத்திரம் இன்றி வடிசாராயம் விற்பனை செய்த குற்றச்சாட்டில் 3 நபர்கள் மதுவரி திணைக்கள அதிகாரிகளினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த 3 நபர்களையும் அதிகாரிகள் நேற்று சாவகச்சேரி நீதிமன்றில் ஆஜர் படுத்தியபோது 3 நபர்களிடமும் விசாரணையை மேற்கொண்ட பின்னர் ஒருவருக்கு இரண்டாயிரம் ரூபாவும் மற்றைய இருவருக்கும் தலா இரண்டாயிரத்து ஐந்நூறு ரூபா அபராதமாகச் செலுத்துமாறு சாவகச்சேரி நீதிமன்ற நீதிபதி மா.கணேசராசா உத்தரவிட்டார்.

(11)

# பரிந்துரைகளுக்கு மாறாக செயற்படும் மருத்துவர்களுக்கு எதிரா நடவடிக்கை

## சுகாதர அமைச்சு எச்சரிக்கை

தனியார் மருத்து விற்பனை நிலையங்களில் ஊடாக, மருத்துவர்களின் பரிந்துரைகள் இன்றி எதிர்காலத்தில் நோயாளர்களுக்கு மருந்துகளை விநியோகித்தால் கடும் சட்ட நடவடிக்கை முன்னெடுக்கப்படும் என சுகாதார அமைச்சு எச்சரிக்கை விடுத்துள்ளது.

அதேவேளை, மருத்துவர்களினால் பரிந்துரைக்கப்பட்ட மருந்துகளுக்கு பதிலாக அதிக விலையுடைய மருந்துகளை விநியோகிக்கும் பட்சத்திலும் அதிக கவனம் செலுத்தப்படும் எனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

சுகாதாரத்துறை அமைச்சர் மைத்திரிபால சிறிசேனவினால், தேசிய வாசனைத்திரவிய உபகரண மற்றும் ஔடத கட்டுப்பாட்டு அதிகாரசபைக்கு இது தொடர்பான அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது.இதன்படி, மருத்துவ பரிந்துரைக்கு புறம்பாக மருந்துகளை விநியோகிக்கும் வர்த்தக நிலையங்களின் குற்றம் ஒப்புவிக்கப்படும் பட்சத்தில் 3 லட்சம் ரூபாவரையில் அபராதம் விதிக்கப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுதவிர, குற்றமிழைத் தவர்களுக்கு இரண்டு வருட சிறைத் தண்டனையோ அல்லது இரண்டு தண்டனைகளுமோ வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதற்கேற்றவாறு, தேசிய வாசனைத்திரவிய உபகரண மற்றும் ஔடத கட்டுப்பாட்டு சட்டமூலத்தை திருத்தியமைக்கவும் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக சுகாதாரதுறை அமைச்சர், குறித்த அதிகாரசபையின் பணிப்பாளர் ஹேமந்த பெனரகவுக்கு அறிவித்துள்ளார்.

# 779ஆம் இலக்க பஸ் சேவையை மீண்டும் ஆரம்பிக்கக் கோரிக்கை

(வேலணை)
பாடசாலை மாணவர்கள், வியாபாரிகள், அரச ஊழியர்கள் மற்றும் பொதுமக்கள் ஆகியோரின் நன்மை கருதி வேலணை வங்களாவடியூடாக ஊர்காவற்றுறை செல்லும் 779 ஆம் இலக்க பஸ் சேவையினை மீண்டும் ஆரம்பிக்கும்படி வேலணை வர்த்தக சங்கத்தின் தலைவர் டாக்டர் க.ஜெயச்சந்திரமூர்த்தி வடபிராந்திய போக்குவரத்துச்சாலை பொதுமுகாமையாளரைக் கேட்டுள்ளார்.

1996ஆம் ஆண்டிற்குப் பின்னர் வங்களாவடியில் இருந்து புளியங்கூடல் நோக்கி ஊர்காவற்றுறை செல்லும் பிரதான வீதி சில கிலோமீற்றர் தூரம் வரை பொது போக்குவரத்திற்குத் தடைசெய்யப்பட்டிருந்தது. அண்மையில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மேற்படி பாதையினைத் திறந்து வைத்து தானே போக்குவரத்துச் சபை பஸ்வண்டியின் ஓட்டிச் சென்றமை குறிப்பிடத்தக்கது.

மேற்படி பாதையூடாகத் தனியார் சிற்றூர்த்திச் சேவையினையும் மீண்டும் ஆரம்பிக்கும்படி சங்கத்தலைவர் வேலணை வர்த்தக சங்கத் தலைவர் கேட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஆக்கபூர்வமான...

மாவட்ட அரச அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன், யாழ். மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா, வட மாகாண ஆளுநரின் செயலர் ஆ.சிவசுவாமி, யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் செல்வி வசந்தி அரசரட்ணம் ஆகியோர் பிரதம அதிதிகளாகக் கலந்து கொண்டனர்.

மேலும் யாழ், கிளிநொச்சி மாவட்டங்களின் பிரதேச செயலர்கள், உதவி அரச அதிபர்கள், திணைக்களத் தலைவர்கள் முதலானவர்களும் இதில் பங்கேற்றனர்.

இக்கூட்டத்தில் யாழ், கிளிநொச்சி மாவட்டங்களில் 2010 ஆம் ஆண்டு முன்னெடுக்கப்பட்ட அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பாக மீளாய்வு செய்யப்பட்டதுடன், 2011ஆம் ஆண்டில் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுவின் அங்கீகாரத்துடன் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ள புதிய செயற்திட்டங்கள் நடைமுறைப்படுத்துவது குறித்து தீவிரமாகப் பரிசீலிக்கப்பட்டது.

அத்துடன், சகலரது ஒத்துழைப்புடன் இத்திட்டங்களை நடைமுறைப்படுத்தவும் இணக்கம் காணப்பட்டது. மேலும் இவ் அபிவிருத்தித் திட்டங்கள் தொடர் பான ஆவணப் படம் மற்றும் விளக்க வுரைகளும் யாழ்.மா வட்ட அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார், கிளிநொச்சி அரச அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் ஆகியோரினால் கூட்டத்தில் முன்வைக்கப்பட்டது.

இதேவேளை, மேற்படி மாவட்டங்களில் வீடமைப்பு, விவ சாயம், வீதி அபிவிருத்தி, நீர்வி நியோகம், கண்ணி வெடியகற்றல், கல்வி வசதிகள் குறித்த புதிய அபிவிருத்தித் திட்டங்களும் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

மேலும், யாழ்.மாவட்டத்தில் புதிதாக விடுவிக்கப்பட்ட தெல்லிப்பளை பிரதேச செயலர் பிரிவு மற்றும் நல்லூர் பிரதேச செயலர் பிரிவுகளிலும் புதிய அபி விருத்தித்திட்டங்கள் இவ் வருடம் முன்னெடுக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இவ் அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் கலந்துகொண்டு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கருத்துத் தெரிவிக்கையில், பிரதேச ரீதியாக அமைக்கப்பட்டுள்ள அபிவிருத்திக் குழுவின் ஊடாக முன்மொழியப்படும் அபிவிருத்தித் திட்டங்களை மட்டுமே மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்திற்கு சமர்ப்பிக்கும்படி சகல தரப்பினரையும் கேட்டுக்கொண்டார். இதன் மூலமாக எமது பகுதிகளின் அபிவிருத்திக்கு சகலரதும் பங்களிப்பு இன்றியமையாதது எனவும் தெரிவித்தார்.

# உலங்கு வானூர்தி விபத்தில் 17 பேர் பலி

இந்தியாவின் அருணாச்சல பிரதேச மாநிலத்தில் நேற்று இடம்பெற்ற ஹெலிகொப்டர் விபத்தொன்றில் 17 பேர் பலியாகியுள்ளனர். பறந்து கொண்டிருந்த இந்த ஹெலிகொப்டர் தீப்பற்றிக் கொண்டதன் துண்டு துண்டாக சிதறி வீழ்ந்தது. இவ்விபத்தில் மேலும் 6 பேர் காயமடைந்துள்ளனர். குவாஹெட்டி நகரிலுள்ள கோபிநாத் போர்டோலோய் சர்வதேச விமான நிலையத்திலிருந்து தாவாங் நகரை நோக்கி சென்று கொண்டிருந்த ஹெலிகொப்டரே இவ்வாறு விபத்துக்குள்ளாகியுள்ளது.சீன எல்லைக்கருகிலுள்ள தாவாங் மாவட்டத்தில் அண்மைக் காலத்தில் இடம்பெற்ற இரண்டாவது ஹெலிகொப்டர் விபத்து இதுவாகும். கடந்த வருடம் நவம்பர் மாதம் 19 ஆம் திகதி ஹெலிகொப்டர் ஒன்று பறக்க ஆரம்பித்து சில நிமிடங்களில் விபத்துக்குள்ளானதால் 12 பேர் பலியானமை குறிப்பிடத்தக்கது.



# விமானியின் சாதுரியத்தால் 86 பயணிகள் உயிர் தப்பினர்

## சென்னை விமான நிலையத்தில் சம்பவம்

(கொழும்பு)

சென்னை விமான நிலையத்தில் விமான விபத்து ஒன்று தவிர்க்கப்பட்டதில் 86 பேர் மயிரிழையில் உயிர் தப்பியுள்ளனர்.

இந்தச் சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது,

ஆந்திர மாநிலம் ஹைதராபாத்திலிருந்து 81 பயணிகளுடன் நேற்றுக் காலை 10.45 மணிக்கு ஜெட் விமானம் சென்னை விமான நிலையத்தில் தரையிறங்கி ஓடுதளத்தில் அந்த விமானம் வேகமாகச் சென்று கொண்டிருந்த போது, அதன் பின்புற டயர் பலத்த சத்தத்துடன் வெடித்துள்ளது.

இதனைத் தொடர்ந்து விரைந்து செயற்பட்ட விமானி சாதுரியமாக உடனடியாக விமானத்தை நிறுத்தியதால் பெரும் விபத்து தவிர்க்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

விமானத்தின் டயர் வெடித்ததைத் தொடர்ந்து, மேலும் பெரியளவில் விபத்து ஏற்படாதவாறு தடுப்பு நடவடிக்கைகளை அதிகாரிகள் மேற்கொண்டதுடன், அந்த விமானத்தில் இருந்த பணிப் பெண்கள் உட்பட 86 பேரையும் பத்திரமாக மீட்டனர்.

# 100 அடி பள்ளத்தில் பஸ் வீழ்ந்தது; ஒருவர் பலி, 35 பேர் படுகாயம்

(கொழும்பு)

பசறை - மடுல்சீம வீதியில் நேற்று மாலை பஸ் ஒன்று 100 அடி பள்ளத்தில் வீழ்ந்ததில் ஒருவர் பலியானதுடன் மேலும் 35 பேர் காயமடைந்துள்ளனர்.

பஸ்ஸின் சாரதி மெதிகஹாதென்ன வைத்தியசாலையில் அனுமதிக்கப்படுவதற்கு முன்னரே உயிரிழந்துள்ளார்.

மேற்படி தனியார் பஸ் பசறையிலிருந்து றோபெரியை நோக்கி சென்றுகொண்டிருந்ததாக மடுல்சீம பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

காயமடைந்த நபர்கள் மெதிகஹாதென்ன ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

எல்ல, பசறை, மடுல்சீம, றோபெரி ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்தவர்களே காயமடைந்துள்ளனர். வளைவொன்றில் திரும்பும்போது பஸ்ஸின் சாரதி கட்டுப்பாட்டை இழந்ததால் இந்த விபத்து ஏற்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

# மா விலையை உயர்த்தியமைக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை

(கொழும்பு)

நுகர்வோர் விவகார சபையின் அனுமதியின்றி கோதுமை மாவின் விலையை அதிகரித்தமை தொடர்பில் குறித்த நிறுவனங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு கூட்டுறவு மற்றும் உள்நாட்டு வர்த்தக அமைச்சு தீர்மானித்துள்ளது.

பிறிமா மற்றும் செரண்டிப் ஆகிய கோதுமை மா நிறுவனங்கள் நுகர்வோர் விவகார அதிகார சபைக்கு அறிவிக்காது மாவின் விலையை அதிகரித்துள்ளதாக அமைச்சின் செயலாளர் சுனில் எஸ்.சிறிசேன குறிப்பிட்டுள்ளார்.

செரண்டிப் நிறுவனம் ஒரு கிலோகிராம் மாவின் விலையை மூன்று ரூபாவாலும், பிறிமா நிறுவனம் ஒரு கிலோகிராம் மாவின் விலையை நான்கு ரூபா 50 சதத்தினாலும் அதிகரித்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

இது தொடர்பில் தேவையான சட்டங்களை நடைமுறைப் படுத்துவது குறித்து நுகர்வோர் விவகார சபையின் தலைவருக்கு ஆலோசனை வழங்கியுள்ளதாகவும் கூட்டுறவு மற்றும் உள்நாட்டு வர்த்தக அமைச்சு குறிப்பிடுகின்றது.

# வவுனியாவில் கடந்த மூன்று மாதங்களில் 19 சிறுவர் துஷ்பிரயோக செயற்பாடுகள்

(கொழும்பு)

வவுனியா மாவட்டத்தில் இந்த வருடத்தில் முதல் 3 மாதங்களில் மட்டும் சிறுவர்களுக்கு எதிரான துஷ்பிரயோக செயற்பாடுகள் 19 நடைபெற்றுள்ளதாக வவுனியா மாவட்ட தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் இணைப்பாளர் க.செல்வக்குமார் தெரிவித்துள்ளார்.

இதனடிப்படையில் இந்த வருடம் ஜனவரி மாதத்தில் 4 முறைப்பாடுகளும் பெப்ரவரி மாதத்தில் 6 முறைப்பாடுகளும் மார்ச் மாதத்தில் 9 முறைப்பாடுகளும் தமக்குக் கிடைக்கப் பெற்று அவை தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

இதேவேளை, கடந்த வருடத்தில் 96 முறைபாடுகள் வவுனியா மாவட்டத்தில் பதியப்பட்டுள்ளன. தற்போது சிறுவர் துஷ்பிரயோகம் சம்பந்தமான முறைப்பாடுகளைத் தெரிவிக்க 1929 என்ற கட்டணமற்ற தொலைபேசி சேவை தேசிய சிறுவர் அதிகார சபையால் அறிமுகப் படுத்தப்பட்டுள்ளதாகவும், எனவே இவற்றைப் பயன்படுத்தி பொது மக்கள் உடனடியாக முறைபாடுகளை வழங்கலாம் எனவும் அவை தொடர்பாகத் தாமதமின்றி விசாரணை செய்யப்படும் எனவும் மாவட்ட இணைப்பாளர் தெரிவித்துள்ளார்.

அத்துடன் இந்த வருடம் எதிர்வரும் காலங்களில் சிறுவர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் துஷ்பிரயோகங்களைத் தவிர்ப்பதற்கு ஏற்ற பல விழிப்புணர்வுச் செயற்பாடுகள் அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள் ஊடாக மேற்கொள்ளப்படவுள்ளதாகவும் இதற்கு அனைத்துத் தரப்பினரதும் பூரண ஒத்துழைப்பு இன்றியமையாதது எனவும் அவர் கூறியுள்ளார்.

# ஐ.நாவின் குற்றச்சாட்டுக்களை முறியடிக்க ஒன்றுதிரளுங்கள்

## லக்பிம அழைப்பு

(கொழும்பு)

ஐக்கிய நாடுகளின் நிபுணர் குழுவினால் இலங்கை தொடர்பில் வெளியிடப்பட்டுள்ள அறிக்கை பக்கச்சார்பானது என லக்பிம பத்திரிகையின் ஆசிரியர் தலையங்கத்தில் சுட்டிக்காட்டப் பட்டுள்ளது.

நிபுணர் குழுவொன்றை அமைப்பது தொடர்பில் பின்பற்றப்பட வேண்டிய நடைமுறைகளை மீறி ஐக்கிய நாடுகளின் செயலாளர் நாயகம் பான் கீ மூன் இந்தக் குழுவை நிறுவியுள்ளதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

உலகின் ஏனைய நாடுகளில் மனித உரிமை மீறல்கள் இடம் பெறும் போது இதே விதமாக பான் கீ மூன் ஆலோசனை பெற்றுக் கொள்கின்றாரா அல்லது விசாரணை நடத்துகின்றாரா என லக்பிம பத்திரிகையின் ஆசிரியர் தலையங்கத்தில் கேள்வி எழுப்பப்பட்டுள்ளது.

லிபியா, ஆப்கானிஸ்தான், ஈராக் போன்ற நாடுகளில் அமெரிக்க உள்ளிட்ட நாடுகளினால் மேற்கொள்ளப்பட்டு வரும் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் ஐக்கிய நாடுகள் இவ்வாறான நடைமுறையைப் பின்பற்றத் தவறியுள்ளதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

உலகப் பயங்கரவாத அமைப்பான புலிகளைத் தோற்கடிப்பதற்கு எடுக்கப்பட்ட முயற்சிகளை மனித உரிமை மீறலாக கருதப்பட முடியாது என சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

புலி ஆதரவாளர்களிடம் மட்டுமே இவர்கள் ஆதாரங்களை திரட்டியுள்ளதாக தெரிவிக்கப் பட்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் அமைப்பின் யுத்தக் குற்றச் சாட்டுக்களை முறியடிப்பதற்கு நாட்டின் சகல மக்களும் பூரண ஒத்துழைப்பு வழங்க வேண்டுமென கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

### ஐ.நா.அறிக்கை....

பாடுகளை விடுத்தன. இலங்கைத் தமிழர்களுக்கு ஆதரவளிப்பதாக அவர்கள் கூறினர்.

எனினும் ஐக்கிய நாடுகள் சபையின் அறிக்கை வெளியாகியுள்ள நிலையில், இதுவரையில் எந்தக் கருத்தையும் அவர்கள் முன்வைக்கவில்லை என அந்த இணையத்தளம் சுட்டிக்காட்டியுள்ளது.

### லிபியாவுக்கு....

முன்னர் நிராகரித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

எனினும், தமது ஐரோப்பிய ஒன்றியத்தின் படையினர் தமக்கு அல்லது மனிதாபிமான உதவி நடவடிக்கைகளுக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டால் தவிர மோதல்கள் எதிலும் ஈடுபடமாட்டார்கள் என அறிவிக்கப்பட்டுள்ளது.

### அரசின்....

குறிப்பிட்டுள்ளார்.

இதற்கிடையில், ஐக்கிய நாடுகள் சபையின் அறிக்கை குறித்த இலங்கை அரசாங்கத்தின் உத்தியோகபூர்வ நிலைப்பாட்டை எதிர்பார்த்திருப்பதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், இந்த வாரமளவில் குறித்த அறிக்கை உத்தியோகபூர்வமாக வெளியிடப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

### பாதுகாப்புச் சபையில்.....

கெய்ரோ பயணம் குறித்தும் ஆராய்வது தொடர்பாக நிகழ்ச்சி நிரல் முன்வைக்கப்பட்டுள்ளது.

ஐ.நா.வின் அரசியல் விவகாரத் திணைக்களம் இந்த நிகழ்ச்சி நிரலை சமர்ப்பித்திருப்பதாக ஐ.நா. பாதுகாப்புச் சபையின் இரு உறுப்பினர்கள் கூறியுள்ளதாகவும் இன்னர் சிற்றி பிரஸ் தெரிவித்துள்ளது.

2009ஆம் ஆண்டு போரின் இறுதிக்கட்டத்தின் இலங்கை விவகாரம் தொடர்பாக ஆராய கோஸ்டாரிக்காவும் மெக்சிக்கோவும் ஐ.நா. பாதுகாப்புச் சபையில் கொண்டு வந்த தீர்மானத்தை ரஷ்யாவும், சீனாவும் ஏனைய நாடுகளும் தடுத்திருந்தன.

இதன்பின்னர் ஐ.நா பாதுகாப்புச் சபையில் இலங்கை விவகாரம் தொடர்பாக முறைப்படியாக அல்லாமல், அதிகாரபூர்வமற்ற வகையிலேயே ஆராயப்பட்டது குறிப்பிடத்தக்கது. இலங்கை விவகாரம் ஐ.நா. பாதுகாப்புச் சபையில் எடுத்துக் கொள்ளப்படுவது குறித்து, ஐ.நா பாதுகாப்புச் செயலாளரின் அரசியல் விவகார உதவிச் செயலாளர் லியான் பொஸ்கோ நேற்றுமாலை உறுதிப் படுத்தியிருந்தார்.

எனினும், ஐ.நா. பாதுகாப்புச் சபையில் இலங்கை விவகாரம் ஆராயப்பட்டதா என்பது பற்றிய மேலதிக தகவல்கள் இன்னமும் வெளியாகவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

### குற்றவாளிக் கூண்டுக்குள்....

வழங்குவதன் மூலம் உலகத்துடன் இணக்கமாகச் செல்வதா என்பதை இந்த அரசாங்கம்தான் தீர்மானிக்க வேண்டும்.

ஐ.நா. அறிக்கை முதலாம் குற்றவாளியாக இலங்கை அரசாங்கத்தையும், இரண்டாம் குற்றவாளியாக புலிகளையும், மூன்றாம் குற்றவாளியாக ஐ.நா. அமைப்பையுமே அடையாளம் கண்டுள்ளது.

இலங்கையில் போர் நடைபெற்ற போதும், அதற்கு முன்னரும், பின்னரும் எதுவுமே முறை கேடாக இலங்கையில் நடைபெறவில்லை என்று கூறி எவரும் இனித் தப்பித்துக் கொள்ள முடியாத நிலைமை இன்று உருவாக்கப்பட்டுள்ளது.

போர் நடைபெற்ற இறுதி நாட்களில் என்ன நடந்தது என்பது தொடர்பிலே உலகம் கேள்விகளைக் கேட்கத் தொடங்கியுள்ளது.

இதன் மூலம் போரினால் சொல்லொண்ணா துன்பங்களுக்கு உள்ளாகியுள்ள தமிழ் மக்களுக்கு முழுமையான நீதியையும் சமாதானத்தையும் ஐ.நா. சபை உடனடியாகக் கொண்டுவந்து தந்துவிடும் என்று நாங்கள் கனவு காண முடியாது.

இது ஒருவிதமான ஆரம்பம், இதற்கடுத்து வரும் கட்டங்களை ஐ.நா. சபை தீர்மானிக்காது. அவற்றை இலங்கை அரசாங்கமும், தமிழ் தலைமைகளும் தான் தீர்மானிக்க வேண்டும்.

யுத்த வெற்றியை மாத்திரம் தொடர்ந்து முன்னெடுத்துச் சர்வ தேசத்தை பகைத்துக்கொள்வதா அல்லது ஒன்றுபட்ட இலங்கைக்குள்ளே தமிழ் மக்களுக்கு சுயாட்சியை வழங்குவதன் மூலம் உலகத்துடன் இணக்கமாக செல்வதா என்பதை இந்த அரசாங்கம் தான் தீர்மானிக்க வேண்டும் எனவும் தெரிவித்துள்ளார்.

### நாட்டின் இறையாண்மை....

நாட்டின் இறையாண்மை மற்றும் சுயாதீனத் தன்மை என்பவற்றைப் பாதுகாக்கும் பொருட்டு நடவடிக்கை எடுக்கவுள்ளதாக கொழும்பில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஐ.நா. செயலாளரின் நிபுணர் குழு அறிக்கை தொடர்பில் எதிர்க்கட்சியின் நிலைப்பாடு தொடர்பில் செய்தியாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும் முகமாகவே இந்தக் கருத்து வெளியிடப்பட்டுள்ளது.

இதேவேளை, ஐக்கிய நாடுகள் நிபுணர் குழு அறிக்கை தொடர்பாக அர்சாங்க தரப்பில் நடவடிக்கை எடுப்பதற்கு நிபுணத்துவ குழுவொன்று எதிர்வரும் நாட்களில் நியமிக்கப்படவுள்ளதாக வெளியுறவுத்துறை அமைச்சு தெரிவித்துள்ளது. பெரும்பாலும் சட்டமா அதிபர் தலைமையிலேயே இந்த நிபுணத்துவ குழு அமையும் என அமைச்சின் சிரேஷ்ட பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் அறிவுறுத்தல்களுக்கு அமையவே அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும் என பேச்சாளர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இது தொடர்பாக கருத்து வெளியிட்டுள்ள நீர் விநியோத்துறை அமைச்சர் தினேஷ் குணவர்தன தெரிவிக்கையில், குறித்த அறிக்கை ஐக்கிய நாடுகளின் பொதுச் சபையினால் வெளியிடப் பட்ட அறிக்கை அல்ல என தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் எதிர்காலத்தில் வெளியுறவுத் துறை அமைச்சு ஊடாக நடவடிக்கை எடுக்கவுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கை தொடர்பிலான அறிக்கை குறித்து, வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் வெளிநாட்டு ராஜதந்திரிகளுக்கு விளக்கமளிக்கவுள்ளார் என அரசாங்க தகவல் திணைக்களத்தின் இணையத்தளத்தில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2011 ஏப்ரல் 20 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

**14) கீழே காணப்படுவது ஒரு விற்பனை நிலையத்தின் விலைப்பட்டியலாகும். அதன்படி, பின்வரும் வினாக்களுக்குரிய விடைகளைப் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.**


விலைப்பட்டியல்

| | | |
|---|---|---|
| 500g | மா | 26.00 |
| 250g | கருவாடு | 40.00 |
| 1kg | சீனி | 34.00 |
| 500ml | தேங்காய் எண்ணெய் | 40.00 |
| ½ m | புடவை | 60.00 |
| 2 | தேங்காய் | 30.00 |


01. 1 1/2kg கருவாடு வாங்கச் செலவாகும் தொகை யாது? ........................
02. 1m 50 cm புடவை வாங்க எவ்வளவு பணம் தேவைப்படும்? ........................
03. 3 தேங்காய்களின் விலை யாது? ........................
04. 3/4 kg மா வாங்குவதற்கு எவ்வளவு பணம் தேவைப்படும்? ........................
05. 2 L தேங்காய் எண்ணெயின் விலை யாது? ........................
06. என்னிடம் ரூபாய் 50 காசுத்தாள்கள் 2உம், ரூபாய் 20 காசுத்தாள்கள் 3 உம், ரூபாய் 10 காசுத்தாள்கள் 4உம் உள்ளது. 2m புடைவை வாங்குவதற்கு இன்னும் எனக்கு எவ்வளவு பணம் தேவைப்படும்?
........................

**15.** நாஸர் கடைக்குச் செல்வதற்கு வீட்டில் இருந்து பி.ப. 4.45 இற்குப் புறப்பட்டார். அவர் கடைக்குச் சென்று வீடு திரும்பிய போது நேரம் பி.ப. 6.35 மணியெனின், அவருக்குக் கடைக்குச் சென்று திரும்ப எடுத்த மொத்த நேரம் யாது? ........................


**16.** என்னிடம் 25 சத நாணயங்கள் 6உம், 50 சத நாணயங்கள் 8 உம், ரூபாய் 2 நாணயங்கள் 6உம், ரூபாய் 5 நாணயங்கள் 4உம் உள்ளன. அதன்படி என்னிடமுள்ள நாணயங்களின் மொத்தப் பெறுமதி யாது?
........................

**17.** 
இவ்வுருவில் உள்ள சிறிய சதுரம் ஒன்றின் பரப்பளவு 1 சதுர சென்ரிமீற்றர் எனின், இவ்வுருவின் சுற்றளவு யாது? ........................


**18.** ஒருவர் தனது பயணத்தின் 1/8 பங்கைத் துவிச்சக்கர வண்டியிலும், 1/2 பங்கைப் பேருந்திலும், 3/8 பங்கை முச்சக்கர வண்டியிலும் பயணஞ் செய்தார். அவ்வாறாயின் அவர்,
1. மிகக் குறைந்த தூரம் பயணஞ் செய்த வாகனம் எது? ........................
2. மிகக் கூடிய தூரம் பயணஞ் செய்த வாகனம் எது? ........................

**19.** 

இவ்வுருக்களில் காணப்படும் முறையில், 3 பாத்திரங்களில் தண்ணீர் ஊற்றப்பட்டுள்ளது. அதன் படி மூன்று பாத்திரங்களிலும் உள்ள நீரின் முழு அளவை லீற்றர், மில்லி லீற்றரில் தருக.
1. லீற்றர் :........................
2. மில்லி லீற்றர்:........................

**20.** 

இச் செவ்வகத்தின் சுற்றளவு 30 மீற்றர் எனின், A யிலிருந்து B வரையுள்ள தூரம் எத்தனை மீற்றராகும்?........................

**21.** 

இந்தக் கனவுருவினால் வெட்டியெடுக்கக் கூடிய ஒரு பக்க நீளம் 3 சென்ரிமீற்றர் ஐ கொண்ட சதுர முகிகளின் எண்ணிக்கை யாது?........................

**22.** 
இச்சில்லு 1/4 பங்கு சுழலும் போது, அது பயணம் செய்யும் தூரம் 25 சென்ரிமீற்றர் எனின், இச்சில்லு இரண்டு முறை சுழலும் போது பயணம் செய்யும் மொத்தத் தூரம் எவ்வளவு?
........................

**23.** நாங்கள் புகை வண்டியில் செல்வதற்காகப் புகையிரத நிலையத்தை அடைந்தோம். அப்போது எனது நண்பர்கள் சிலரும் அங்கு நின்றனர். இதனைத் தொடர்ந்து நடந்தவற்றை விபரிக்கும் ஆறு வாக்கியங்கள் எழுதுக.
........................
........................
........................
........................
........................
........................


**எம்மால் வாரந்தோறும் வெளியிடப்படும் வினாத்தாள்களைப் பெற்று பயன்பெறும் மாணவர்களுக்கு அரசால் நடத்தப்படும் பரீட்சையில் முன்னணியில் உள்ள மாணவர்கள் கல்விமுரசு வாராந்தப் பயிற்சிபெற்ற வினாத்தாள்களை உறுதிப்படுத்தின் துவிச்சக்கர வண்டிகள் மற்றும் பெறுமதிமிக்க பரிசில்கள், சான்றிதழ்கள் வழங்கிக் கௌரவிக்கப்படும்.**



# தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை - 2011

பகுதி - II

1மணி 15 நிமிடம்



# கல்வி முரசு

வெளியீடு 10



**இலங்கையிலுள்ள ஐந்து ஆசிரிய நட்சத்திரங்களினால் தொகுக்கப்படும் விசேட வினாத்தாள்.**

**01) கீழே தரப்பட்ட பந்தியை வாசித்து அதன் கீழுள்ள வினாக்களுக்கு விடைதருக.**

நெருப்பு உருண்டை போலச் சூரியன் வானத்திலிருந்து பூமியைச் சுட வைக்கின்றது. சூரிய ஒளிபட்ட முகில்கள் தங்க நிறமாகக் காட்சி தருகின்றன. காற்று வீசவில்லை. மலைகளில் ஊற்றுக்கள் வற்றிப் போகின்றன. ஆற்று நீர் குறைவடைகின்றது. ஆற்றின் அடியிலுள்ள கற்கள் ஒட்டகத்தின் முதுகைப் போன்று காட்சி தருகின்றன. பகலில் வெப்பத்தைத் தாங்க முடியாதுள்ளது. வியர்வை உடம்மை நனைக்கின்றது. நெருப்பினருகே இருப்பதைப் போன்று உள்ளது. வாவிகளோ வற்றி, வெடித்துக் காட்சி தருகின்றன.

01. மேலே கூறப்பட்ட சம்பவமானது பெரும்பாலும் எக்காலத்திற்குரியது?
........................
02. இப்பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள உலோகமொன்றின் பெயர் தருக?
........................
03. இங்கு விலங்கினமொன்றின் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது. அது என்ன?
........................
04. இங்கு குறிப்பிடப்பட்டுள்ள நீர்நிலைகள் இரண்டின் பெயர் தருக.
1........................ 2........................
05. மனிதனிலிருந்து வெளியேற்றப்படும் கழிவுப் பொருள் ஒன்றை மேலுள்ள பந்தியிலிருந்து தெரிவு செய்து எழுதுக.
........................
06. பின்வரும் சொற்களுக்குரிய ஒத்த கருத்துச் சொற்களை மேலுள்ள பந்தியிலிருந்து தெரிவு செய்து எழுதுக.
1. பகலோன் :........................ 2. விண் :........................
3. தேகம் :........................ 4. தீ :........................
07. 'முகில்கள் தங்க நிறமாகக் காட்சி தருகின்றன' இவ்வாக்கியத்தை ஒருமை வாக்கியமாக மாற்றி எழுதுக.
........................
08. 'வியர்வை உடம்பை நனைக்கிறது' இவ்வாக்கியம் எக்காலத்திற்குரியது?
........................

**02) பின்வரும் சொற்களை ஒழுங்குபடுத்தி கருத்துள்ள வாக்கியமாக்கி எழுதுக.**

01. போராடிய/அகிம்சை வழியில்/வெள்ளையருக்கு/மாமனிதர்/ஆவர்/மகாத்மாகாந்தி/எதிராக
........................
02. அதிகாலையில்/அடிவானம்/இருந்து/செக்கச் செவேலென/சிவந்து
........................

**03) பின்வரும் தொடர்களால் உணர்த்தப்படும் கருத்தினை எழுதுக.**

01. சீரும் சிறப்பும் :........................
02. நட்டாற்றில் விடல் :........................

**04) அடைப்புக்குள் உள்ள சொற்களிலே சரியாக எழுத்துக் கூட்டப்பட்ட சொற்களைத் தெரிவு செய்க.**

01. குப்பி (விளக்கினை, விழக்கினை) பயன்படுத்துவது ஆபத்தானதாகும்.
........................
02. பரீட்சையில் கூடிய புள்ளிகளைப் பெறுவதற்கு (பயிற்ச்சி, பயிற்சி) களை போதியளவில் செய்ய வேண்டும்.
........................

**05) நெல் வயல்களில் அல்லது பண்ணைகளில் பின்வருவனவற்றைக் குறிப்பதற்குப் பயன்படுத்தப்படும் ஒவ்வொரு சொல் எழுதுக.**

1. வயல் :..............................
2. மாடுகள் :..............................
3. கலப்பை :..............................
4. கதிர் அறுத்தல் :..............................
5. வைக்கோல் குவியல் :..............................

**06) சரியாயின் சரி எனவும் பிழையாயின் பிழை எனவும் அடையாளமிடுக.**

1. வீதி விளக்கில் செம்மஞ்சள் நிறம் பயணத்தை ஆரம்பிக்கலாம் என்பதற்கான சமிக்ஞையாகும் (................)
2. ஆடையில் தீப்பற்றினால் விரைவாக ஓடவேண்டும். (................)
3. மின்னினால் பாதிக்கப்பட்டவருக்கு உடனடியாக செயற்கைச் சுவாசம் அளிக்க வேண்டும். (................)
4. இலங்கையின் மிகப்பெரிய மின் உற்பத்தி நிலையம் விக்டோரியா வலுநிலையம் ஆகும். (................)
5. ஆறுகள் கடலுடன் சங்கமிக்கும் இடம் கழிமுகம் எனப்படும். (................)

**07) பொருத்தமான சொற்களைத் தெரிவு செய்து இடைவெளிகளை நிரப்புக.**

(லக்ஷபானா, இரணைமடுக்குளம், மகாவலி, பம்பரகந்த, ஹற்றன்)

1. இலங்கையில் மிக நீளமான ஆறு..............................கங்கை ஆகும்.
2. நீர்மின்னைப் பெறுவதற்கு இலங்கையில் முதன்முதலில் அமைக்கப்பட்ட வலுநிலையம்..............................ஆகும்.
3. மிக உயரமான நீர்வீழ்ச்சி..............................நீர்வீழ்ச்சி ஆகும்.
4. மலைநாட்டிலிருந்து உருவாகும் ஆறுகளிலிருந்து நீரைப் பெறாதது..............................ஆகும்.
5. மகாவலி கங்கை உற்பத்தியாவது..............................மேட்டு நிலத்திலிருந்து ஆகும்.

**08) மிகவும் பொருத்தமான விடையைத் தெரிவுசெய்து கோடிடுக.**

1) மீனை மிக நீண்ட காலத்திற்குப் பாதுகாத்து வைத்திருக்கக்கூடிய முறைகளில் சிறந்தது.
   1. அவித்து வைத்தல் 2. குளிரூட்டியில் வைத்தல்
   3. புகையிட்டு வைத்தல் 4. காயவைத்து வைத்தல்

2) 'ஈசல்' என்று அழைக்கப்படும் பிராணியின் முதற் பருவம்
   1. கறையான் 2. வண்ணத்துப்பூச்சி
   3. புழு 4. குடம்பி

3) பின்வரும் எந்த விளையாட்டில் மிகக் குறைந்த போட்டியாளர்கள் பங்குபற்றுவார்கள்.
   1. கரப்பந்தாட்டம் 2. மேசைப்பந்து 3. கூடைப்பந்து 4. துடுப்பாட்டம்

4) நீருடன் சேர்க்கும்போது நீருக்கடியில் செல்லக்கூடிய திரவம் பின்வருவனவற்றுள் எது?
   1. இரசம் 2. வினாகிரி 3. தேங்காய்ப்பால் 4. மண்ணெண்ணெய்

5) அனுராதபுரத்தில் அமைந்துள்ள அபயகிரி விகாரையைக் கட்டுவித்த மன்னன்.
   1. மகாசேனன் 2. வலகம்பா 3. தாதுசேனன் 4. துட்டகைமுனு

**09) பின்வரும் ஒவ்வொரு சொல்லுக்கும் பொருத்தமான ஆங்கிலச் சொல்லை எழுதுக.**

1. பச்சை நிறம் :..............................
2. நத்தார் வாழ்த்துக்கள் :..............................
3. நதி :..............................

**10) பின்வரும் சிங்களச் சொற்களின் கருத்தை தமிழில் எழுதுக.**


1. ஆயுபோவன் :..............................
2. இந்தி ஆப்ப :..............................
3. வாடிவென்ன :..............................






**11. கீழே காணப்படும் ஒவ்வோர் உருவின் பெயரையும் அடைப்புக்குறிக்குள் இருந்து தெரிந்து அதன் கீழுள்ள புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.**

(அரிவாள், மண்வெட்டி, வாள், கோடரி)



(..............................) (..............................) (..............................) (..............................)

**12. கீழேயுள்ள உருக்களுள் காணப்படும் ஒவ்வொரு பூச்சியின் பெயரையும் அடைப்புக்குறிக்குள் இருந்து தெரிந்து புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.** (நுளம்பு, வீட்டு ஈ, கரப்பான் பூச்சி, எறும்பு)



(..............................) (..............................) (..............................) (..............................)

**13. நீர்கொழும்பு விஜயரத்தினம் இந்து மத்திய கல்லூரியில் 2, 3, 4, 5 ஆம் தரங்களில் 2007 ஜனவரி மாதம் 1ஆம் திகதி இருந்த மாணவர் தொகை, புதிதாக வந்த மாணவர் தொகை, விலகிச் சென்ற மாணவர் தொகை, இப்போதைக்கு வகுப்பில் உள்ள மாணவர் தொகை எனும் விபரங்களைப் பின்வரும் அட்டவணை காட்டுகின்றது. அதன்படி அட்டவணையின் இடைவெளிகளில் வரவேண்டிய தொகைகளைக் கணித்து எழுதுக.**

| | தரம் | இருந்த மாணவர் தொகை | புதிதாக வந்த மாணவர் தொகை | விலகிச் சென்ற மாணவர் தொகை | தற்போது வகுப்பிலுள்ள மாணவர் தொகை |
|---|---|---|---|---|---|
| உ+ம் | 2 | 45 | 08 | 03 | 50 |
| 01 | 3 | ........ | 06 | 09 | 42 |
| 02 | 4 | 43 | ........ | 08 | 47 |
| 03 | 5 | 47 | 04 | 08 | ........ |

04. 3, 4 ஆம் தரங்களில் தற்போதுள்ள மொத்த மாணவர் தொகை யாது?

..............................

05. 3, 4, 5 ஆம் தரங்களில் இருந்து விலகிச் சென்ற மொத்த மாணவர் தொகை யாது?

..............................

06. 2, 3, 4, 5 ஆம் தரங்களில் புதிதாக வந்து சேர்ந்த மாணவர்களின் தொகையைக் கீழுள்ள வரைபில் வரைந்து காட்டுக.

